பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 07 சனிக்கிழமை (23-10-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:333

### அமைதி முயற்சிகள் ஆக்கபூர்வமான திசையில் நகராததால்

# டோக்கியோ பிரகடன நிதி உதவியை

# அரசுக்கு இப்போது வழங்கக்கூடாது!

## ஜப்பான் விசேட தூதுவர் அகாஷியிடம் புலிகள் நேரடியாகத் தெரிவிப்பார்கள்

கொழும்பு, ஒக்ரோபர்23

**டோக்கியோ மாநாட்டில் இலங்கைக்கு உதவுவதற்கு உறுதியளிக்கப்பட்ட நிதியில் கணிசமான தொகைகளை இலங்கைக்கு இப்போது வழங்குவதற்கு ஜப்பான் தயாராகி வருவதாக வெளியான செய்திகள் குறித்துப் புலிகளின் தலைமைப்பீடம் குழப்பமும், அதிருப்தியும் அடைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.**

**எதிர்வரும் 27ஆம் திகதி இலங்கை வரும் ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷியிடம் இப்பிரச்சினையை விடுதலைப் புலிகள் நேரடியாகக் கிளப்புவர் எனக் கூறப்படுகின்றது.**

2003 ஜூனில் டோக்கியோவில் இடம்பெற்ற இலங்கைக்கு உதவும் நாடுகளின் மாநாட்டில் இலங்கைக்கு 45ஆயிரம் கோடி ரூபா நிதியுதவி அளிக்க உறுதியளிக்கப்பட்டது.

ஆனால், சமாதான முயற்சிகளின் முன் நகர்வைப் பொறுத்தே இந்த நிதி வழங்கப்படும் என்ற நிபந்தனையும் அந்த உறுதியுரைப் பிரகடனத்தில் இடம்பெற்றிருந்தது.

தறபோது இலங்கையில் சமாதான முயற்சிகள் தடைப்பட்டுப் போய்நிற்கின்றன.

இந்நிலையில், கடந்த மாதம் ஜப்பான் விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், டோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட நிதியில் கணிசமான பங்கை வழங்குவதற்கு ஜப்பான் இணங்கியுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பெண் உட்பட மூவர் மன்னாரில் கைது!

கொழும்பு,ஒக்.23

மன்னார், ஊருமலை கடற்கரையில் வைத்து ஒரு பெண்ணையும், இரண்டு தமிழ் இளைஞர்களையும் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் மன்னார், ஊருமலைப் பகுதியில் - கடற்கரையில் பற்றைகள் நிறைந்த பகுதியில் நின்றிருந்த இவர்களைக் கடற்படையினர் கைது செய்தனர். வேணுதாசன், சின்னராசா, லட்சுமி ஆகிய மூவருமே கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாம் இந்தியாவுக்குச் செல்வதற்காகவே குறிப்பிட்ட இடத்தில் அமர்ந்து ட்றோலருக்காகக் காத்திருந்தனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அரசியல் குழு ஜேர்மன் சென்று சேர்ந்தது

பேர்லின்,ஒக்.23


ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் நேற்று ஜேர்மனி போய்ச் சேர்ந்தனர்.

சுவீடன் தலைநகர் ஸ்ரொக்ஹோமில் இருந்து விசேட விமானம் மூலம் புலிகளின் பிரதிநிதிகள் நேற்றுக் காலை ஜேர்மன் தலைநகர் பேர்லினைச் சென்றடைந்தனர்.

அங்கு வெளிவிவகார அமைச்சு உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் புலிகளின் குழுவினர் பேச்சு நடத்தினர். இந்தப் பேச்சுக்களில் ஜேர்மனில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பங்குபற்றுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

புலிகளின் குழுவில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் காவல்

(16ஆம் பக்கம் பார்க்க)



நவராத்திரி விழாவையொட்டி இந்தியாவின் கொல்கத்தா நகர வீதிகளில் பல அடி உயரமுள்ள பல்வேறு அம்மன் சிலைகள் உட்பட இறையுருவங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அந்தச் சிலைகளில் மக்களைக் கவர்ந்த மஹிஷாசூரவர்த்தினி சிலையையே படத்தில் காண்கிறீர்கள். இந்தச் சிலையை ஆயிரக்கணக்கான மக்கள் தினமும் பார்வையிட்டுவருகின்றனர். (10)

## ஒப்படைக்கப்படும் சொத்துக்கள் பாதுகாப்பாக மீளளிக்கப்படும்

### புலிகளின் பொறுப்பாளர் பரா அறிவிப்பு

பேர்லின்,ஒக்.23

தமிழர் பிரதேசங்களில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் ஈழத் தமிழர்கள் தமது அசையும், அசையாச் சொத்துக்களை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றால் அவை அனைத்தும் மீண்டும் பாதுகாப்பாக அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா தெரிவித்தார். ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள புலிகளின் அரசியல் குழுவில் இடம்பெற்றுள்ள அவர், மேற்குநாடு ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

புலிகளிடம் ஒப்படைக்கப்படும் சொத்துக்கள் உரிமையாளர்கள் அல்லது அவர்களுடைய வாரிசுகளிடம் - பின்னுரித்தாளர்களிடம் - ஒப்படைக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். இதற்கு வசதியாக தமிழீழ சொத்துக் கண்காணிப்புப் பிரிவினரிடம் சொத்துக்களை ஒப்படைத்துச் செல்ல வேண்டும் என்று அவர் ஆலோசனையும் வழங்கியுள்ளார். ஒப்படைக்கப்படும் சொத்துக்களை எந்தக் கால கட்டடத்திலும் மீளப் பெறலாம் என்றும் அவர் சொன்னார். (ஐ-க)

## நோர்வேக்கு எதிரான பிரேரணையை நேற்று நாடாளுமன்றில் எடுக்க முடியாமற் போயிற்று

### தமிழ்க் கூட்டமைப்பின் ஆட்சேபத்தினால்

நோர்வே அனுசரணையாளர்களுக்கு நாடாளுமன்றத்தில் விசேட பிரேரணை மூலம் 'நோவே' காட்ட முயன்ற ஜாதிக ஹெல உறுமயவின் முயற்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் முறியடித்தனர். நாடாளுமன்றத்தில் தமிழ்மொழிப் பிரயோகத்துக்கு உரிய வாய்ப்பு அளிக்கப்படாததை முன்வைத்தே கூட்டமைப்பினர் ஹெல உறுமயவின் முயற்சிக்குக் கால் தடம் போட்டனர்.

நேற்று நாடாளுமன்றத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்று நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளையின்போது ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் வண. அத்துரெலிய ரத்ன தேரர் ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

ஆனால், இந்த ஒத்திவைப்புப் பிரேரணை தொடர்பான அறிவித்தல் தமிழில் இடம்பெற்றிருக்கவில்லை. இதனைத் தமிழ்த் தேசியக் கூட்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இன்று தொடக்கம் ரூபா 2/= அதிகரிப்பு

அன்புநிறை வாசகர்களே!

உங்களது அபிமானத்துக்குரிய உதயன் நாளிதழின் விலையை இன்று (23.10.2004) சனிக்கிழமை தொடக்கம் இரண்டு ரூபாவால் உயர்த்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

பத்திரிகை அச்சிடும் தாள், எரிபொருள்கள் மற்றும் நானாவித விலை அதிகரிப்புகள் அவ்வப்போது நடைமுறையாகி வருகின்றன. எனினும், மிகப் பல மாதங்களாக அந்தச் சுமையை நாமே தாங்கிக் கொண்டோம்.

இப்போது அதற்கு அப்பாற்பட்ட நிலையிலேயே, சிறிய உயர்வைச் செய்துள்ளோம். தவிர்க்க முடியாத இந்த விலையேற்றத்தைப் புரிந்து கொண்டு எங்களுக்கு ஆதரவு நல்குமாறு வாசகர்களாகிய உங்களை மிக்க அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

உதயனின தரமும் சிறப்பும் என்றும் மேலோங்க நிற்கும் என்பது நீங்கள் அறிந்ததே.

நன்றி

\- நிர்வாகத்தினர்.

## குடாநாட்டில் குற்றச் செயல்களை தடுக்க இனி இராணுவம் உதவுமாம்

### நீதிமன்றக் கலந்துரையாடலில் யாழ்.தளபதி இணக்கம்

யாழ்ப்பாணம்,ஒக்.23

குடாநாட்டில் கொலை, களவு, கசிப்பு உற்பத்தி, மணல் அகழ்வு போன்ற குற்றச்செயல்களைக் குறைப்பதற்கு - தடுப்பதற்கு - பொலீஸாருக்கு இராணுவத்தினர் உதவுவர்.

யாழ். நீதிமன்றத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஒரு கலந்துரையாடலில் யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் இதற்கான இணக்கத்தைத் தெரிவித்தார்.

யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா, மேலதிக

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அபு கிராய்ப் சிறைச் சித்திரவதைகளுக்கு அமெ.இராணுவமும் சி.ஐ.ஏயுமே காரணம்!

பக்தாத்,ஒக்.23

ஈராக்கின் அபுகிராய்ப் சிறையில் அந்நாட்டுக் கைதிகளைச் சித்திரவதை செய்யும்படி உத்தரவிட்டது அமெரிக்கப் புலனாய்வுத் துறையும் (சி.ஐ.ஏ.) அந்நாட்டு இராணுவ உயர் அதிகாரிகளுமே எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அபுகிராய்ப் சிறையில் நடந்த சித்திரவதைகள் தொடர்பாக பக்தாத்தின் அருகில் உள்ள ஒரு நீதிமன்றில் விசாரணை நடந்தது. இதில் அபுகிராய்ப் சிறையில் நடந்த சித்திரவதைகளை நேரில் கண்ட பலர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர். இவர்கள் மூலமே இந்தத் திடுககிடும் தகவல்கள் வெளிவந்தன.

ஈராக்கில் அபுகிராய்ப் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அந்நாட்டவர்களை பிரிட்டன், அமெரிக்க இராணுவத்தினர் சித்திரவதை செய்தனர். உடைகளைக் களைந்து நிர்வாணமாக்கினர். நாய்களை விட்டுக் கடிக்க விட்டனர். பாலியல் சித்திரவதை செய்தனர். இந்த விவகாரம் பெரிய அளவில் வெடித்தது. கைதிகளுக்கு நடந்த கொடுமை வெளி உலகுக்குத் தெரிந்தது. இதன்மூலம் கைதிகளுக்கு நிவாரணம் கிடைத்தது.

கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டது குறித்து இப்போது விசாரணை நடத்தப்படுகிறது. சிறையில் பணிபுரிந்த அமெரிக்கச் சிப்பாய்களான இவான் பெரிட்ரிக், கெப்டன் டொனால்ட் ரீசி ஆகியோர் மீது கடும் குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டுள்ளன. இதில், பெரிட்ரிக் மீது மட்டும் ஐந்து குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மேலும், பெரிட்ரிக், டொனால்ட் ஆகியோரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் கைதிகளைச் சித்திரவதை செய்யும்படி உத்தரவிட்டதே அமெரிக்கப் புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏ. தான் என்ற திடுக்கிடும் தகவல் வெளியானது.

இது குறித்து பெரிட்ரிக் கூறுகையில்:-

சி.ஐ.ஏயின் அதிகாரம் பெற்ற ஓ.ஜி.ஏ. என்ற அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகள் இரவில் சிறைக்கு வருவார்கள். கைதிகளை ஒரே அறையில் அடைத்து, அவர்களைத் தூங்கவிடாமல் விசாரணை செய்வார்கள். இதுபோல் நடத்திய விசாரணையால் ஒரு கைதிக்கு மனநிலை பாதிக்கப்பட்டது. அடிக்கடி பயந்து, பயந்து அவர் அலறுவார் என்று கூறினார்.

அமெரிக்காவில் இருந்து வீடியோ மூலம் வாக்குமூலம் அளித்த டொனால்ட்டும் இதே போலவே தெரிவித்தார்.

இதன்மூலம், அபுகிராய்ப் கொடுமைகளுக்குக் காரணமாக இருந்தவை சி.ஐ.ஏயும் அமெரிக்க இராணுவ உயரதிகாரிகளும்தான் என்பது தெளிவாகத் தெரியவந்துள்ளது.

அபுகிராய்ப் சித்திரவதைகள் பற்றிய தகவல்கள் பரபரப்பாக வெளியானபோது, இராணுவம் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களை 'பென்டகன்' உறுதியாக நிராகரித்தது. சிறையில் பணிபுரிந்த சில மோசமான அமெரிக்க, பிரிட்டன் இராணுவத்தினரில் சிலரே இது போன்ற காரியத்தைச் செய்துவிட்டனர் என்று 'பென்டகன்' கூறியது. இப்போது அதன் 'குட்டு' வெளிப்பட்டுவிட்டது. (எ-க)

## ஈராக்கில் அமெ.கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு பிரிட்டன் படை செல்லும்

ஈராக்கில் அமெரிக்கக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குப் பிரிட்டன் படைகள் செல்லும் என்று அந்நாட்டு அமைச்சரவை முடிவுசெய்து தெரிவித்திருக்கின்றது. 600 பேர் கொண்ட ஆயுதம் தாங்கிய காலாட்படைப் பிரிவினரும் 200 துருப்பினாகளும் ஈராக்கின் தென்பகுதிக்கு அனுப்பி வைகைகப்படுவார்கள் என்றும் இவர்கள் பிரிட்டிஷ் தளபதியின் கட்டுப்பாட்டிலேயே செயற்பாடுவார்கள் என்றும் பாதுகாப்பு அமைச்சர் ஜெப் ஹூன நாடாளுமன்றத்தில் வைத்துத் தெரிவித்தார்.

இராணுவத் தேவைகளைக் கருதியே இந்த முடிவு எடுக்கப்பட்டதென பிரிட்டிஷ் அரசு தெரிவித்தது. ஆனால், இந்த அறிவிப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை ஆத்திரப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. இன்னும் இரண்டு வாரங்களில் நடைபெறவுள்ள அமெரிக்க அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுக்குத் தமது ஆதரவை வெளிக்காட்டுவதற்காகவே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் மற்றுமொரு செய்திக்குறிப்புத் தெரிவிக்கிறது.(எ-க)

# கணவர் வீரப்பனை உயிரோடு பிடித்திருந்தால் அரசையும், பொலீஸையும் பாராட்டியிருப்பேன்

## அவரது மனைவி முத்துலட்சுமி தெரிவிப்பு

மேட்டூர்,ஒக்.23

எனது கணவர் வீரப்பனை உயிருடன் பிடித்திருந்தால் தமிழக அரசையும், நடவடிக்கையில் ஈடுபட்ட பொலீஸாரையும் பாராட்டியிருப்பேன். ஆனால், அவரைச் சுட்டுக்கொன்றுவிட்டனர் என்று வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி நேற்றுத் தெரிவித்தார்.

### உலக அரங்கில்

நேற்று நண்பகல் 12 மணியளவில் வீரப்பனின் மூன்றாவது நாள் காரிய நிகழ்ச்சி அவர் அடக்கப்பட்ட மயானத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு செய்தியாளர்களுக்குக கருத்துத் தெரிவிக்கையிலேயே முத்துலட்சுமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்- எனது கணவர் கொடுத்த பணத்தை அதிரடிப் படை பொலீஸார் பறிமுதல் செய்துவிட்டனர். இந்தப் பணத்தை எனக்குத் திருப்பித்தரவேண்டும். எனது கணவரைச் சுட்டுக்கொன்ற அதிரடிப் பொலீஸாருக்கு தமிழக அரசு பரிசுத்தொகை மற்றும் வீடுகள் வழங்கப்படும் என அறிவித்துள்ளது. அதிரடிப்படையால் நிறையப் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் அரசு உதவித்தொகை வழங்கவேண்டும். அதுபோல எனது குடும்பத்துக்கும் அரசு உதவி செய்யவேண்டும். எனது பிள்ளைகளைப் படிக்கவைக்கப் பணம் வேண்டும்.

எனது கணவர் வீரம் உடையவர். அவரை மூன்று மானிலப் பொலீஸார் தேடியும் பிடிக்க முடியவில்லை. நான் அவரைப் பிரிந்து பத்து ஆண்டுகள் ஆகிறது. அவர் காட்டில் இருந்தார். நான் நாட்டில் இருந்தேன்.

எனது கணவருக்கு வயதாகிவிட்டதால் தான் பொலீஸார் சுட்டுள்ளனர். பொலீஸார் மீது நான் வழக்குத் தொடருவேன் - என்றார்.

இந்தக் காரிய நிகழ்ச்சியில் வீரப்பனின் உறவினர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-க)

# இஸ்ரேல் வான்வழித் தாக்கு; ஹமாஸ் இயக்க நிபுணர் பலி!

பலஸ்தீனத்தின் வடக்குக் காஸாப் பகுதியில் இஸ்ரேலியப் படையினர் நடத்திய விமானத் தாக்குதலின்போது காரில் பயணம் செய்துகொண்டிருந்த ஹமாஸ் இயக்கத்தின் ரொக்கெட் நிபுணர் கொல்லப்பட்டார்.

ஹமாஸ் இயக்கத்தின் முக்கிய தாக்குதல் ஆயுதமாகப் பயன்படுத்தப்படும் கஸ்ஸம் ரொக்கெட்டுக்களைத் தயாரிக்கும் குழுவின் முக்கிய நிபுணர்களில் ஒருவரான அத்னன் அல்-கௌஸ் என்பவரே மேற்படித் தாக்குதலில் கொல்லப்பட்டவராவார். இவரோடு பயணித்த அவரது சகாக்களும் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேலியப் படையினரால் மிக நீண்டகாலமாகத் தேடப்பட்டுவந்த இவர், கொல்லப்பட்டிருப்பது மிகுந்த சந்தோஷத்தைத் தருவதாக இஸ்ரேலிய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கப்படும் என ஹமாஸ் இயக்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அல்-கௌஸ் பயணித்த கார் மீதே இஸ்ரேலியப் படை தாக்குதல் நடத்தியது.

காஸாவின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள முஸ்லீம் பள்ளிவாசலின் அருகே இந்தக கார் வந்துகொண்டிருந்தபோது தாக்கப்பட்டுள்ளது. (எ-க)

# மீனவர்கள் 'வான்' தோண்டுவதற்கு வல்வையில் படையினர் குறுக்கீடு

கரவெட்டி,ஒக்.23

மீன்பிடி வள்ளங்களைத் தரிக்க விடுவதற்கு வசதியாக வடமராட்சியின் கடற்கரையோரங்களில் 'வான்' தோண்டும் மீனவர்களின் பணி படையினருடனான முறுகல் நிலைக்கு மத்தியில் நடைபெற்றுள்ளது.

வல்வெட்டித்துறையின் முக்கிய மூன்று கரைகளில் கடந்த மூன்று நாள்களாக கடற்றொழிலாளர்கள் 'வான்' தோண்டும் பணியில் ஈடுபட்டனர்.

கொத்தியால், ரேவடி, மதவடி ஆகிய கரைகளில் புல்டோசரின் உதவியுடன் 'வான்' தோண்டி முடிக்கப்பட்டிருக்கிறது.

வடமராட்சியின் 524 ஆவது படையணி தளபதியின் இணக்கத்துடன் கடற்றொழிலாளர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டபோதும் வல்வையில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினர் இந்தப் பணியைத் தடுக்க முற்பட்டனர் என்று கூறப்படுகிறது. இதனால் கடற்றொழிலாளர்களுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே அடிக்கடி முறுகல் நிலை ஏற்பட்டுவந்தது.

எனினும், பிரதான மூன்று இடங்களிலும் 'வான்' தோண்டும் பணி நிறைவுபெற்றுள்ளதாக வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர் சங்கச் செயலாளர் சி.தனபாலசிங்கம் தெரிவித்தார். (ஐ-70-173)

## தலைவர் பிரபாவின் பிறந்தநாள் வல்வையில் 3 நாள் கொண்டாட்டம்

கரவெட்டி,ஒக்.23

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது பிறந்த நாளை வெகு சிறப்பாகக் கொண்டாடுவதற்கு வல்வெட்டித்துறையில் ஏற்பாடுகள் தொடங்கிவிட்டன.

தலைவரின் பிறந்த தினத்தை நவம்பர் 25, 26, 27 ஆகிய மூன்று நாள்களும் விழாவாகக் கொண்டாடுவதற்கு வல்வை ஆதிசக்தி கடற்றொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கம், வல்வை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியன விரிவான ஏற்பாடுகளைச் செய்யவுள்ளன.

பிறந்த நாளை ஒட்டி தலைவரின் 25 அடி உயர 'கட் அவுட்' நிறுவப்படவுள்ளது.

பொதுமக்களுக்கு குளிர்பானங்கள், கேக் மற்றும் தின்பண்டங்களை வழங்குவதற்கும், இன்னிசை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் கூட ஏற்பாடுகள் தொடங்கிவிட்டன. (ஐ-70)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.23

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் திருமதி வி.சுகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் பரிசளிப்பு நிகழ்வில் ஓய்வுபெற்ற கணக்காளரும் நலன் விரும்பியுமான வே.நடராஜா பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-13)

## ஆயிரம் ரூபா கள்ள நோட்டுக்கள் கம்பளையில் மீட்பு

கம்பளை,ஒக்.23

இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆயிரம் ரூபா கள்ளநோட்டுகளைக் கம்பளைப் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர். இவற்றை வைத்திருந்தார்கள் என்று கூறபபடும் இரு சந்தேகநபர்களையும் அவர்கள் கைது செய்துள்ளனர்.

பொலீஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து அவர்கள் மேற்கொண்ட தேடுதலின் போது இந்தக் கள்ள நோட்டுக்கள் சிக்கின. வீடு ஒன்றிலிருந்தும், வர்த்தக நிலையம் ஒன்றிலிருந்தும் நோட்டுக்களைப் பொலீஸார் கைப்பற்றினர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (ஐ-க)

# யாழ். பல்கலைக்கழகத்தில் புதிய கற்கைநெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.23

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் புதிதாக ஆரம்பிக்கப் படவுள்ள குடித்தொகை அபிவிருத்திக் கல்விக்கான கற்கைநெறியின் ஆரம்ப நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ், சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் சபா.ஜெயராசா, கலைப்பீடாதிபதி இரா.சிவச்சந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு குடித்தொகை அபிவிருத்திக் கல்விக் கற்கைநெறிக்கான இணைப்பாளர் பேராசிரியர் கா.குகபாலன் கேட்டுள்ளார். (ஐ-13)

# அடுத்த மாதம் 3 ஆம் திகதி ஆளுநர் இங்கு வருகிறார்

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா இருநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அடுத்த மாதம் 3ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார்.

குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுத் திட்டங்கள் குறித்து திணைகளத் தலைவர்கள், பிரதேச செயலர்களுடன் அவர் ஆராயவிருக்கிறார் என்று மாகாண சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தெல்லிப்பழையில் அமையவிருக்கும் புற்றுநோய் சிகிச்சை நிலையப் பகுதியை அவர் பார்வையிடுவார். அந்த நிலையத்தைத் திறக்கும் பணிகளைத் துரிதப்படுத்துவது குறித்தும் அதிகாரிகளோடு ஆராய்வார்.

குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றம் குறித்து நேரில் ஆராயுமாறு ஜனாதிபதி செயலகம் விடுத்த பணிப்புரையை அடுத்தே ஆளுநர் இந்த விஜயத்தை மேற்கொள்கிறார் என ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ-3)

# வன்னி தொழில்நுட்ப நிறுவனத்தின் கணனி அறிமுகக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.23

தமிழீழ மாணவர் அமைப்பின் ஒத்துழைப்புடன் வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம் நடத்திவரும் கணனி அறிமுகக் கருத்தரங்குகள் கடந்த 18ஆம் திகதிமுதல் வடக்கு - கிழக்கின் 8 மாவட்டங்களிலும் நடைபெற்றுவருகின்றன.

இதன் ஒரு கட்டமாகக் கடந்த 20 ஆம் திகதி மல்லாகம் மகாவித்தியாலயத்தில் அதிபர் நாகேந்திரசீலன் தலைமையில் கருத்தரங்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வலிகாமம் வலய கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.கைலேசநாதன், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ஆழவேந்தன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தொடர்ந்து வன்னி தொழில்நுட்ப நிறுவக விரிவுரையாளர்களும், மாணவர்களும் செயலமர்வை நடத்தினர். (ஐ-202)

# ஹெல உறுமய கையெழுத்துவேட்டை

சமாதானப் பேச்சுக்கான அனுசரணைப் பணியில் இருந்து நோர்வேயை அப்புறப்படுத்த வேண்டும், இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் புலிகளுடன் பேசக்கூடாது ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து ஒரு கோடி கையெழுத்துக்களைப் பெறும் நடவடிக்கையை ஹெல உறுமய கட்சி ஆரம்பித்துள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இந்த நடவடிக்கை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான பிரசாரப் பணிகளை பிக்குகளை மட்டுமே கொண்ட ஹெல உறுமயக் கட்சி தீவிரமாக ஆரம்பித்துள்ளது.

ஒரு கோடி கையெழுத்துக்களைத் திரட்டியதும் அவற்றையும் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க ஹெல உறுமய தீர்மானித்துள்ளது. (ஐ-க)

## காலத்தின் தேவை கருதி

# யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தின் மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி - ஒக். 26-30

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவை முன னிட்டு நடைபெறவுள்ள மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி பல பரிமாணங்களைக் கொண்ட பல துறைகளினூடாக முன்னெடுக்கப்படவுள்ளது. அவற றுள் இரசாயனவியற்துறையானது பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலருக்கும் பயன்தரக்கூடிய விதத்திலே தனது கண்காட்சி அமைப்புக்களை மேற்கொள்ளவுள்ளமை வரவேற் கத்தக்கது.

எமது தாயகத்தின் பெரும்பாலான பாடசாலை களிலே இரசாயனவியற்துறைக்கான ஆய்வு கூட வசதிகள் என்பது மிகவும் அரிதாகவேயுள்ளன. இந்நிலையில், எமது மாணவர்கள் உயர்தர, சாதா ரணதரப் பரீட்சைகளின்போது ஆய்வுகூட பரிசோத னைகளின் அடிப்படையில் அமையும் அமைப்புக் கட்டுரை வினாக்களுக்கு முகம் கொடுக்க வேண்டி யவர்களாகவுள்ளனர். இதனால், ஆய்வுகூட அனு பவத்தைப் பெறாத மாணவர்கள் வீணாகப் புள்ளி களை இழக்க வேண்டி ஏற்படுகிறது. தற்போது நடைமுறையிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான 'z' ஸ்கோர் முறையில் இரசாயனவியல் பாடம் முக்கிய மானதோர் இடத்தினை வகிக்கின்றது.

எனவே, ஆய்வுகூட வசதியற்ற மாணவர்க ளின் நன்மை கருதி யாழ். பல்கலைக்கழக விஞ் ஞானபீட இரசாயனவியற்துறையினர் க.பொ.த. (உ/த) வகுப்பு பாடத்திட்டங்களுக்கு அமை வான பரிசோதனைகளை நேரடியாகச் செய்து காட்டவுள்ளதுடன், பரீட்சை நோக்கிலான விளக் கங்களையும் அளிக்கவுள்ளனர். அத்துடன் தேவை யான பரிசோதனைகள் அடங்கிய கைநூல் ஒன் றும் பாடசாலை மாணவர்களுக்காக அச்சடித்து வழங்கப்படவுள்ளது. இது எமது தாயக மாண வர்களுக்குக் கிடைத்த அரியதொரு வாய்ப்பும், வரப்பிரசாதமும் ஆகும்.

தனியார் கல்விநிலையங்கள், பாடசாலை என எங்கும் வெறும் கரும்பலகை விளக்கங்க ளுடன் கற்றுக்கொண்ட விடயங்களை நேரடியா கக் கண்ணால் பார்த்து கற்கக் கூடியதொரு வாய்ப்பு இன்று கிட்டியுள்ளது. இதனைத் தவற விடாமல் பயன்படுத்திக் கொள்வது அவசிய மானதாகும். ஆயிரம் தடவைகள் புத்தகப் பக்கங் களைப் புரட்டிப் புரட்டிப் படித்தாலும் புரியாத விட யங்கள் விஞ்ஞானபீடக் கண்காட்சி மூலம் இலகு வாகபுரியும். இதனை ஏற்கனவே, உணர்ந்ததனா லேயே வெளிமாவட்டப் பாடசாலைகள் பலவும் விஞ்ஞானக் கண்காட்சி தொடர்பாக இப்போதே பேசத் தொடங்கிவிட்டார்கள். அம்பாறை தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் ஏற்கனவே நுழைவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

### இரசாயனவியல் துறை

தனியே இரசாயனவியற்துறையினர் பாட சாலை மாணவர்களின் நலனை மட்டுமே கருத் திற்கொள்ளாது எமது தாயக பொருளாதாரம், எமது மக்களின் சூழலியல், பாதுகாப்பு, எமது வளங்களைப் பாதுகாத்தல் எனும் விடயங்கள் தொடர்பாகவும் தமது கவனத்தைச் செலுத்தி யுள்ளனர். பிரதானமாக பின்வரும் நான்கு துறை களினூடாகத் தமது கண்காட்சி அமைப்புக்களை ஒழுங்குபடுத்தியுள்ள இரசாயனவியற்துறையினர் அந்தந்தத் துறைகளினூடாக எவ்வளவுதூரம் மக்களுக்குப் பயனானவற்றை வழங்கமுடியுமோ அவ்வளவு தூரம் அதற்காக முயன்று இருக்கிறார் கள்.

1) அசேதன இரசாயனம்
2) சேதன இரசாயனம்
3) பௌதிக இரசாயனம்
4) தொழில்முறை இரசாயனமும் சூழல் இரசாயனமும்.

இவற்றுள்ளே அசேதன இரசாயன பகுதியா னது இன்று பெரும் பிரச்சினையாக உருவெடுத துவரும் குடிதண்ணீர் பற்றாக்குறை, நன்னீர் உப்பு நீராக மாறுதல் ஆகிய விடயப பரப்புகள் தொடர் பாக தமது கவனத்தைச் செலுத்தியுள்ளது. இவ் வாறான நிலைகளைத் தடுப்பது எவ்வாறு என் பது தொடர்பாகவும், அவற்றுக்காக விஞ்ஞானக் கல்வியை எவ்வாறு உபயோகிக்கலாம் என் பது தொடர்பாகவும் இதில் தீவிர கவனம் செலுத தப்பட்டுள்ளது.

இதன் வெளிப்பாடாகவே இராணுவ அரண் களின் மூலமாகவும் சீரற்ற வடிகாலமைப்புக் காரணமாகவும் குடாநாட்டு நன்னீர் உவர்நீரா கவும் மாறும் விடயம் தொடர்பான ஆய்வும் அமைந்துள்ளன. இவை உண்மையிலேயே வர வேற்கத்தக்க விடயங்களே.

பொதுவாகவே எமது சமூக நலன் விரும்பி களிடம் ஒரு கருத்து நிலவி வருவதை அவதா னிக்கக் கூடியதாகவுள்ளது. அதாவது எமது பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் எமது சமூகத் தில் ஏற்படும் தொடர் பிரச்சினைகளுக்கும், சூழ லியல் தாக்கங்களுக்கும் விஞ்ஞான ரீதியான அணுகுமுறைகளைக் கண்டறியவோ அல்லது பிரயோகிக்கவோ முயலவில்லை என்பதாகும். இந்தக் கருத்தினை கொண்டிருப்போர் நிச்சயமாக விஞ்ஞானக் கண்காட்சியைப் பார்வையிடுவார் கள் எனின் தமது கருத்துத் தவறானதென விளங் கிக் கொள்வார்கள்.

சேதன இரசாயனத்திலும் தொழில்முறை இரசாயனத்திலும் மிகவும் முக்கியமான தொழில் முறை உற்பத்திகள் தொடர்பான விடயங்கள எடுத்துரைக்கப்படவுள்ளன. "என்ன வளம் இல்லை எங்கள் திருநாட்டில் ஏன் கை ஏந்தவேண்டும் வெளிநாட்டில்" என்பதற்கு ஏற்ப எம்தாயக வளங் களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய எரிசோடா, சலவைச்சோடா, அப்பச்சோடா, சாரா யம், பியர், கறி உப்பு, பணம் உற்பத்திப்பொருள கள், பிளாஸ்ட்டிக் மீள் உற்பத்தி போன்ற இன் னோரன்ன விடயங்கள் தொடர்பாக சேதன தொழில் முறை இரசாயனத்தில் கவனம் செலுத்தப்பட் டுள்ளது.

இவற்றைப் பார்வையிடும் சுயதொழில் ஈடு பாடுகொண்ட முயற்சியாளர்கள் தமக்கான தொழிலை தீர்மானித்துக் கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் அவை தொடர்பான மேலதிக தகவல்களையும் விளக்கங்களையும் பெற்றுக் கொள்ளமுடியும். நாமும் சளைத்தவர்கள் அல்லர்; எம்மாலும் அணுவைத் துளைக்க முடியும். அந்த எண்ணங்கள் எங்கள் கைவண்ணத்தில் இன்று உள்ளன. அவை நாளை உருவம் பெறும் எனும் மன உந்துதல் விஞ்ஞானபீட இரசாயனத்துறை கண்காட்சியைப் பார்வையிடுவோர் மனங்களில் பிறக்கும்.

பௌதிக இரசாயனமும் பல்வேறு விடயங் கள் தொடர்பாக எடுத்தாராய்கின்றது. சாதா ரணமாகக் கிடைக்கக்கூடிய வளங்களைப் பயன படுத்தி எவ்வாறு ஆய்வுகூடப் பொருள்களை உற்பத்தி செய்வது என தெளிவான விளக் கங்கள் அளிக்கப்படவுள்ளன.

இவற்றோடு சூழலியல் தொடர்பாகவும் தனி யான ஓர் அலகு இரசாயனவியற்துறையின ரால் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வுலகானது நாம வாழும் சூழல் பாதுகாப்பானதா? நாம் அருந்தும் குடிதண்ணீர் சுத்தமானதா? அதிலுள்ள மாசு கள் என்ன? அவற்றை அகற்றுவது எவ்வாறு என்பது தொடர்பாக விரிவாக விளக்கவுரைகள் வழங்கப்படவுள்ளன. இதனை எமது மக்கள் கேட்டறிந்து கொண்டால் தம்மைத்தாமே பாது காக்கும் உத்திகளை அறிந்துகொள்ளமுடியும்.

கல்வி அடைவுகளினூடகவும் இரசாயன மாசாக்கிகளிலிருந்து தப்புவதினூடாகவும் தம்மைப் பாதுகாக்க விரும்பும் எவரும் நிச்சய மாக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட இர சாயனவியற்றுறையினரின் கண்காட்சியை பார்வை யிட்டே ஆகவேண்டும். எனவே எமது நன்மை கருதி உருவாக்கப்படும் கண்காட்சியைக் கண்டு பயனடைய வேண்டியது எமது கடமையாகும்.

- இனியவன்.

ஊடக அனுசரணை: உதயன் அனுசரணை: SAMMSTECH







வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்வி பயிலும் இந்து மாணவர்கள் நேற்று தமது நிறுவனத் தின் முன்பாகவுள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் வாணிவிழாவைக் கொண்டாடினர். பஸ் தரிப்பிடத்தில் சரஸ்வதியின் திருவுருவப் படம் வைக்கப்பட்டிருப்பதை முதலாவது படத்தில் காணலாம். விழாவின் இறுதியில் ஒன்று திரண்ட மாணவர்கள், வாணி விழாவை தொழில் நுட்ப நிறுவனத்தினுள் கொண்டாடுவதற்கு நிர்வாகம் அனுமதி வழங்க மறுத்தமையைக் கண்டித்து பதாகைகளைத் தாங்கியவாறு ஆர்ப் பாட்டத்திலும் ஈடுபட்டனர். இதனை இரண்டாவது படத்தில் காணலாம். "நாடாளுமன்றத்தில் வாணிவிழா வட்டு.தொழில்நுட்ப நிறு வனத்தில் இல்லையா?" என்ற வாசகம் அடங்கிய பதாகைகளை மாணவர்கள் தாங்கியிருந்தனர். (எ-13-51)

## வண்ணாத்திப் பாலம் மிகவும் சேதம்; போக்குவரத்துச் செய்வதில் சிரமம்

வலி.வடக்கு.ஒக்.23

புத்தூர் - மட்டுவில் வீதியில் அமைந்துள்ள வண்ணாத்திப்பாலம் மிகவும் சேதமடைந்து காணப்படுவதால் போக்குவரத்துச் செய்யமுடி யாதநிலை ஏற்பட்டுளளது.

தென்மராட்சி, வலிகாமம் ஆகிய பிரதேசங் களைச் சேர்ந்த மக்களுக்கான பிரதான போக்கு வரத்துப் பாதையில் அமைந்துள்ள இப்பாலம், சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாகப் பழுதடைந்த நிலையில் காணப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது இப்பாலம் மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து உள்ளதுடன், வாக னங்கள் போக்குவரத்துச் செய்யும்போது தடம்பு ளக்கூடிய நிலைமையும் ஏற்படுகின்றது.

ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான வாக னங்களும், சைக்கிள்களும் இவ்வீதியைப் பயன் படுத்தி வருகின்றன.

தென்மராட்சி, வலிகாமம் ஆகிய பிரதேச மக்களின் பிரதான போக்குவரத்து வீதிகளில் ஒன்றான இந்த வீதியில் அமைந்துள்ள வண் ணாத்திப்பாலத்தை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் புனரமைக்க நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டுமென பொதுமக்கள் எதிர்பார்க் கின்றனர். (10-86)

## கௌரிவிரதம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.23

சக்தி விரதங்களில் ஒன்றான கேதார கௌரி விரதம் இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து 21 தினங்கள் நடைபெறவுள்ளது.

அம்மன் ஆலயங்களில் 21 நாள்களும் விசேட பூசைகள் நடைபெற்று, 21 ஆம் நாள் விரதம் அனுஷ்டிப்பவர்களுக்கு விரத நூல் வழங்கப்ப டும். (எ-100)

## வித்தியாரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.23

சிவானந்தா சிறுவர் சமயப்பாடசாலையின் ஏற்பாட்டில் இன்று காலை 9 மணிமுதல் யாழ். திவ்யஜீவன சங்க மண்டபத்தில் வித்தியாரம் பம் நடைபெறவுள்ளது. (எ)

## சனசமூக நிலையத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.23

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தின் புனரமைக்கப்பட்ட நிலைய திறப்புவிழாவும், நூலக சேவை ஆரம்பித்தலும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளன.

நிலையத்தின் தலைவர் க.குமாரசாமி தலை மையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் செ.கஜேந்திரனும், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பா ளர் சி.செழியனும் கலந்துகொள்வர். (எ-203)

## அறநெறி மாணவர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.23

ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பு கதிரேசன இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களுக் கான சீருடை வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற் றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் நடை பெறவுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக் களம் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை மூலம் வழங்கிய சீருடைகள் இந்த நிகழ்வில் வைத்து மாணவர்களிடம் கையளிக் கப்படும்.

அறநெறிப்பாடசாலை ஆசிரியை திருமதி டயாளினி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். சிறப்பு விருந் தினர்களாக பருத்தியடைப்பு கிராம அலுவலர் ம.றெ.ஜெயதரன், ஊர்காவற்றுறை, காரைநகர் பகுதிகளுக்கான பண்பாட்டு அலுவலர் ஆகி யோர் கலந்துகொள்வர்.

சீருடை வழங்கலைத் தொடர்ந்து இந்து சமயம கலாசார அலுவல்கள் திணைக்களத் தினால் மேற்படி பாடசாலைக்கு வழங்கப்பட்ட தபேலா இசைக்கருவியை உதவி அரச அதி பர் க.ஸ்ரீமோகனன் அறநெறிப் பாடசாலை ஆசிரி யையிடம் கையளிப்பார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் தொடர்ந்து நடைபெறும். (எ)

## இளஞ் சைவப்புலவர் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கு வழிகாட்டல் வகுப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.23

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத் தினால் நடத்தப்படும் சைவப்புலவர், இளஞ் சைவப்புலவர் பட்டப் பரீட்சைகளுக்குத் தோற்று பவர்களுக்கு வழிகாட்டல் வகுப்புக்கள் நடத் தப்படவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியால யத்தில் இந்த வகுப்புக்கள் ஆரம்பமாகும் என்றும் -

வகுப்பில் இணைந்து கொள்ளவிரும்புவோர் அன்றைய தினம் சமுகமளித்து தமது பெயர், விவரங்களைப் பதிவுசெய்துகொள்ளலாம் என சைவப் புலவர் சங்கத்தின் பரீட்சைச் செய லாளர் சைவப் புலவர் வ.கந்தசாமி அறிவித் துள்ளார்.

வழிகாட்டல் வகுப்புக்கள் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும். (எ)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.23

எச்.என்.பி.அஷ்யூரன்ஸ் நிறுவனம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று காலை 8.30 மணிக்கு யாழ்.ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

✪ காலை 8.30 மணி - மதுவரித் திணைக் கள அணி எதிர் தேசிய சேமிப்பு வங்கி அணி.
✪ முற்பகல் 11 மணி - தபால் நிலைய அணி எதிர் வர்த்தக வங்கி அணி.
✪ பிற்பகல் 3.30 மணி - ஹற்றன் நஷனல் வங்கி அணி எதிர் மாநகர்சபை 'பி' அணி.(10)

## இறுதியாட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.23

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைக ளுக்கிடையே நடைபெற்று வரும் உதைபந் தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

18 வயதுப் பிரிவு

✪ நெல்லியடி ம.ம.வி. எதிர் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி.

16 வயதுப் பிரிவு

✪ உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி எதிர் தேவரையாளி இந்துக்கல்லூரி. (10)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

49 - தொடர் இலக்கம் உள்ள உழவு இயந்திரமும் பெட்டியும் விற்பனைக்கு உண்டு. இல.9, 4ஆம் குறுக்குத் தெரு, 8ஆம் வாய்க்கால், உருத்திரபுரம், கிளிநொச்சி.
(37880)

பல இன நிறக் குருவிகளும் கூடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: அருமைராசா இதயராசா, பழம் வீதி, ஆனைக்கோட்டை.
(37874)

10-20 போட்டோக் கொப்பி மெசின், டீசல் எஞ்சின் (3கிலோ வாற்ஸ்) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: சொ.விமலன், 593, பருத்தித்துறை வீதி (யாழ்.மா.சபை அருகில்), நல்லூர், யாழ்ப்பாணம். T.P.: 021-222-2181.
(37843)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 1Kg 110/- வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு: றாஜீவ், கால்நடைத் தீவன விற்பனை நிலையம், சண்டிலிப்பாய்ச் சந்தி. T.P.: 222-3529, 222-2867.
(37873)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தினமும் விற்பனைக்குண்டு. 1Kg 120/- கல்பேட் 1Kg 130/- சுத்தம்செய்யப்பட்ட புறொயிலர் 1Kg 200/- தொடர்பு: தாசன் பாம், 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(37851)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தினமும் விற்பனைக்குண்டு. 1Kg 130/- கல்பேட் 1Kg 140/- சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி.
(37884)

## கோழிக்குஞ்சு விநியோகம்

மிகவும் தரமான இரண்டு முறை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட Prima Original Broiler குஞ்சுகள் 35/- பேட்டுக்குஞ்சு 50/-, 25.10.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பருத்தித்துறை - நெல்லியடிக் கிளையிலும், சூட்டிபாம் - வடடுக்கோட்டை R.S.K.பாம் - உடுவில், சுன்னாகம், ஐங்கரன் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் செண்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/38212)

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள TOYOTA HORILA கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: கண்ணன், சந்தான மாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை. (37840)

## வீடு வாடகைக்கு

"சிவனடி", இல.141,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் சகல வசதியுடன் கூடிய மாடி வீடு வாடகைக்குண்டு (நிறுவனங்களுக்கு உகந்தது) மேற்கண்ட விலாசத்தில் பி.ப. 2மணியிலிருந்து மாலை 6மணிவரை தொடர்புகொள்ளவும்.
(37847)

## நாய்க்குட்டி விற்பனை

சுத்தமான Original Dorbermann Pincher, Great Dane நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. க.தனபாலசிங்கம (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (37845)

## பாதீனியம் அழிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.23

புங்குடுதீவு நடுத்துருத்திப் பகுதியில் காணப்பட்ட பாதீனியம் அழிக்கப்பட்டுள்ளது. அப்பகுதியின் விவசாய போதனாசிரியர், சமுர்த்தி முகாமையாளர் ஆகியோரின் தலைமையில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாலேயே பாதீனியம் அழிக்கப்பட்டது. (10-202)

## வதிவிடப் பயிற்சி

தென்மராட்சி,ஒக்.23

யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டாம், மூன்றாம் தர பாடசாலைகளின் அதிபர்களுக்கான ஒன்பது நாள் வதிவிடப் பயிற்சிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நவம்பர் முதலாம் திகதி வரை மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்வதற்கு தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஏழு அதிபர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (10-117)

## மரக்கன்று விநியோகம்

தேசிய மரநடுகை வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மில்க்வைற் தொழிலகத்தினர் பயன்தரும் மரக்கன்றுகளை விநியோகம் செய்துவருகின்றனர். மரக்கன்று பெற விரும்புவோர் வெற்றுப் பால்மா பைக்கற்றுக்களை மில்க்வைற் தொழிலகத்தில் கொடுத்து மரக்கன்றுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என தொழிலதிபர் இ.தவகோபால் தெரிவித்துள்ளார்.
(10-203)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் ராசாவாய் 01 – 12 – 1936



விண்ணில் ஜோதியாய் 14 – 11 – 2002

### அமரர் சின்னக்குட்டி சண்முகராசா

அப்பா!
ஆண்டுகள் இரண்டு சென்றதையா
துயரங்கள் தீரவில்லை
ஆற நினைக்கிறோம்
எம்மால் முடியவில்லை!
உமது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இளவாலை வடக்கு,
இளவாலை, (வேரவல்).

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(37866)(42)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 – 12 – 1939



மறைவு 14 – 10 – 1994

திருமதி
### பாலசிங்கம் சிவனேஸ்வரி

திதி: 23.10.2004


தாமரை நிழலில் வாழ்ந்திடும் தேவதையே - நின்
தாய்மை தென்றல் வீசட்டும்
மல்லிகை அழகில் சிரித்திடும் தாய்மையே - நின்
மங்கல நாள்கள் பேசட்டும்
பூக்களின் அழகில் புன்னகைக்கும் முல்லையே - நின்
பிள்ளைகள் வாழ்வு பொலியட்டும்
கலைமகள் வீதியில் விஜயதசமியே - நின்
கனவுகள் எங்கள் நினைவாகட்டும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (37881)(42-17-46)

## 10ஆம் ஆண்டு நினைவுகள்

ஊற்றாக 27 – 11 – 1948



காற்றாக 12 – 11 – 1994

### அமரர் தம்பிராசா புவனேஸ்வரன் (பவா)

(பிரபல வர்த்தகர்)
திதி:23.10.2004

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசத்தின் இருப்பிடமாய்
வாழ்ந்த எம் தெய்வமே!
ஆண்டு பத்து ஓடி மறைந்தாலும்
உம் துயர் மாறவில்லை அப்பா!
மங்காத உங்கள் புகழ் பூத்து நிற்க!
உங்கள் ஆத்மா சாந்தி அடைக!

என்றும் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்.

டச் வீதி,
உடுவில். (C/38487)(42-46-17)

## கணனிச் செயற்பாட்டு அறை நிர்மாணிப்பு

வலி.தென்மேற்கு,ஒக்.23

சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் கணனி கற்கைநெறி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கென கணனி செயற்பாட்டு அறை ஒன்று தற்போது அமைக்கப்பட்டு வருகின்றது.

வித்தியாலயத்தின் பழைய மாணவரும், லண்டனில் வசித்து வருபவருமான டாக்டர் ஆர். நித்தியானந்தன் கணனி கொள்வனவு செய்வதற்கும், செயற்பாட்டு அறை நிறுவுவதற்கும் இரண்டு லட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (10-135)

## ஒழுங்கை திருத்தப்படவில்லை

யாழ்ப்பாணம்,ஒக்.23

பருத்தித்துறை வீதியில் இருந்து செல்லும் நீர்வேலி வடக்கு, கேரளாவத்தை ஒழுங்கை கடந்த 15 வருடங்களாகத் திருத்தப்படாது உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் மழை காலங்களில் இந்த ஒழுங்கையால் செல்லமுடியாது மாணவர்களும் பொது மக்களும் பெரும் சிரமத்தினை எதிர் நோக்கி வருகின்றனர்.

உரியவர்கள் இந்த ஒழுங்கையைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளினை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.(10-190-203)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 25 – 03 – 1981



தாயக மண்ணில் 23 – 10 – 2000

### கடற்கரும்புலி மேஜர் திருமாறன்/திருவாளன்
### [ஜெயம் நிஷாகரன்]

சம்பவம்:
திருமலைத் துறைமுகத்தினுள் 'லங்காராணி' மீது மேற்கொள்ளப்பட்ட கரும்புலித்தாக்குதலின்போது வீரச்சாவடைந்தார்.

ஒவ்வொரு காலையிலும் விரிகின்ற மலர்களிலே
திருமாறன் முகம் தெரியும்
நாளை பிறக்கும் மழலைகள் "லங்காராணியை" திருமாறன் முட்டிச் சிதைத்த வீரம் அறியும் நாளை புலரும் விடியலில் காலை மலரும் சூரியன் திருமாறன் புகழ்பாடும்.
இத்தாக்குதலின் போது வீரச்சாவடைந்த மாவீரர்கள் அனைவரையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

குடும்பத்தினர்.

சிவன்வீதி,
ஆவரங்கால். (37863)(42-17-46)


## இணையத்தளம்

பாடசாலைகள், சங்கங்கள், நிறுவனங்கள், விற்பனை மையங்களுக்கான இணையத்தளம்
Domain Registration, Hosting, Designing, Maintenance and e-mails
ஒரு வருடத்திற்கான மொத்தக் கட்டணம் ரூபா 8000/= மட்டும்.
**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna.
Phone: 0773 068968.
(சி-37842)

## Organ / Violin Notes

புதிய பாடல்களைக் கேள்விஞானத்தால் (Hearing) எவ்வாறு வாசிப்பது என்பது பற்றிய "The Home Feeling" எனும் புத்தகமும் இசைக்குறிப்புகள் பாகம் 32 ஆகியனவும் வெளிவந்துள்ளன.
கிழமை நாள்களில் 4 மணியின் பின்பும், சனி, ஞாயிறு தினங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.
(37859) **S.S.Rajeendran,**
Karaweena Isai Manram
75, Temple Rd., Nallur, Jaffna.
(Money Order இல் பெறுவதற்கு ரூபா 300/- மட்டும்) (24-14-42-46)


## தவறிவிட்டது

பா.கோபிநாத் என்பவரது தே.அ.அட்டை இல. (771313582v), வாகன அனுமதிப்பத்திரம, விசேட அ.அட்டை என்பன கொட்டடிக்கும் யாழ்.ஆஸ்பத்திரிக்கும் இடையே 22.10.2004 காலை 7.30 மணியளவில் தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள், இல.90, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். அல்லது 077 - 6253475 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
(37886)(42-14-46)

## நெஞ்சை விட்டகலா 4ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1938 – 10 – 14



மறைவு 2000 – 10 – 10

அமரர்
### வல்லிபுரம் வேலாயுதபிள்ளை

ஆண்டுகள் நான்காயினும் ஆறாது எம் நெஞ்சம்
ஆளுமை மிக்க ஒருவர் நம்மிடையே இன்று இல்லை
ஆனாலும் அவர்தம் எச்சங்கள் நன்றாகவே உண்டு
ஆறாத அன்பு நெஞ்சங்கள் ஆறுதலடையட்டும்
ஆத்மா சாந்தியடையட்டும்!
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
உங்கள் ஆத்ம சாந்திக்காக பழம்பதி விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

துயர் பகிரும்:
அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம். (37877)(42-17-46)

உதயன்

## பிழைக்கும் நீதி.....!

உயர் நீதிமன்ற நீதியரசர் பதவியிலிருந்து தமிழரான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் இன்று ஓய்வுபெறுகின்றார். கடந்த செவ்வாயன்று தமது கடைசி நீதிமன்ற அமர்வில் அவர் நமது நீதிமுறைமை குறித்து வெளியிட்ட கருத்துக்களில் ஏற்பட்ட அதிர்ச்சி அடங்குவதற்கு முன்னர் நீதித்துறை பற்றிய மற்றுமோர் அதிர்ச்சித் தகவல் வெளியாகியிருக்கின்றது.

"சார்புபட்ட சிந்தனைகள், தனிப்பட்ட விருப்பு - வெறுப்புத் தெரிவுகள், காழ்ப்புணர்வுகள், பக்கச்சார்புத் தப்பெண்ணங்கள், சார்புபட்டோருக்கு முன்னுரிமை அளித்தல் போன்றவை இந்த நாட்டில் நீதித்துறை தீர்மானங்களை எடுக்கும் நடவடிக்கைகளில் - தீர்ப்புக்களை அளிக்கும் செயற்பாடுகளில் - முறையற்ற விதத்தில் தலையீடு செய்கின்றன" என்று நீதியரசர் விக்னேஸ்வரன் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியிருந்தார்.

அது மட்டுமல்ல, முதனிலை - ஆரம்ப - நீதிமன்றங்கள் மீதே பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்று விசனத்துடன் சுட்டிக்காட்டியிருந்த அவர், தாங்கள் முதனிலை நீதிமன்றங்களில் கடமைபுரிந்த காலத்தில் எவ்வளவு சுதந்திரத்தோடும், திறந்த மனதோடும் பணியாற்றக்கூடியதாக இருந்தது என்பதை நினைவுபடுத்தவும் தவறவில்லை.

இந்த முதனிலை - கீழ்நிலை - நீதிமன்றங்கள் மீதான முறையற்ற அழுத்தங்கள் பற்றிய விவகாரமே இப்போது பெரும்சர்ச்சையாக உருவெடுத்திருக்கின்றது.

நடந்தது இவ்வளவு தான். வெள்ளவாயாவில் பொலீஸ் வாகனம் ஒன்றுடன் நிகழ்ந்த விபத்தில் ஒருவர் பலியானார். அந்தவாகனத்தை பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரே செலுத்தினார் என்பது ஒரு தரப்புவாதம். ஆனால், உயிரிழந்தவரின் உறவினர்களோ ஒரு சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகரே வாகனத்தைச் செலுத்தினார் என அடித்துக் கூறினர்.

விடயத்தை விசாரித்த நீதிவான், சம்பந்தப்பட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருக்கு எதிராக 'வாரண்ட்' உத்தரவு பிறப்பித்தார்.

அந்தப்பொலீஷ் அதிகாரி நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு முறையிட்டார். அவ்வளவு தான். மேற்படி நீதிவானின் உத்தரவை நீதிச்சேவை ஆணைக்குழு மாற்றியமைத்தது; அந்த நீதிவானையும் அவர் 'தவறு' (Error) இழைத்தார் எனத் தெரிவத்து சேவையிலிருந்து இடைநிறுத்தியது - இதுதான் நடந்தது.

ஒரு கீழ்நிலை நீதிமன்றத் தீர்ப்பை - உத்தரவை - மேல்நிலை நீதிமன்றம் ஒன்று மாற்றியமைக்கலாம். அதுதான் சட்டத்தில் வழங்கப்பட்ட ஏற்பாட்டு முறைமை.

ஆனால், இங்கு நீதிச்சேவை ஆணைக்குழு ஒரு நீதிமன்றத் தீர்ப்பை மாற்றியமைத்திருக்கின்றது. இந்த உரிமையை வழங்கியது யார்? நீதிமன்றங்களுக்கு வெளியில் உள்ள நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு, நீதிமன்றத் தீர்ப்பை மீறுவது மட்டுமல்லாமல் மாற்றியமைக்கும் சட்ட அதிகாரம் உண்டா? அப்படியானால் எதிர்காலத்தில் ஆரம்பநிலை நீதிமன்றங்களின் தீர்ப்பினால் தாங்கள் பாதிக்கப்படுகின்றனர் எனக்கருதும் பொதுமக்கள், மேல்நிலை நீதிமன்றங்களுக்குப் பதிலாக நீதிச்சேவை ஆணைககுழுவிடம் தான் இனிப்போகவேண்டுமா? அப்படி வருவோருக்கு எல்லாம் நீதிச்சேவை ஆணைக்குழு உரிய நீதி - சட்ட - நிவாரணங்களை வழங்குமா? அதற்கான சட்ட ஏற்பாடுகள் ஏதேனும் உண்டா?

சம்பந்தப்பட்ட நீதிவான் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட விவகாரமும் சர்ச்சைக்குரியது.

கீழ்நிலை நீதிமன்றங்களின் தீர்ப்புகள் மேல்நிலை நீதிமன்றங்களினால் மாற்றப்படுவதும் திருத்தப்படுவதும் இலங்கை உட்பட சகல - சர்வதேச நாடுகளினதும் - நீதமுறைமை ஏற்பாடு.

இவ்வாறு தீர்ப்புகள் திருத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களில் கீழநிலை நீதிமன்றங்கள் சட்ட (Law) விவகாரததில் அல்லது நிகழ்வு (Facts) விவகாரத்தில் தவறிழைத்திருப்பதாகத் தெரிவித்து, அவற்றைச் சுட்டிக்காட்டி அவற்றின் தீர்ப்புகளை மேல்நிலை நீதிமன்றங்கள் மாற்றியமைக்கும்.

அத்தகைய சந்தர்ப்பங்களில் தமது முன்னைய தீரபபில் சட்டத்திலோ, நிகழ்வு விடயத்திலோ தவறிழைத்த கீழ்நிலை நீதிமன்ற நீதிவானை அதற்காக யாரும் தண்டிப்பதில்லை. தீர்ப்பில் ஏற்படும் தவறுகளுக்காக நீதியாளர்களைத் தண்டிப்பதில்லை. அதற்கான விசேட காப்புரிமை - விடுபாட்டுரிமை - அவர்களுக்கு உண்டு.

ஏனெனில், அவர்கள் நல்லெண்ணத்துடன், (Good Faith) அந்தந்த தீர்ப்புக்கான முடிவுக்கு வந்தார்கள் என்று நீதித்துறை கருதுவதுதான் அதற்கு அடிப்படைக் காரணம்.

தற்போது சர்ச்சைக்குரியவராகியிருக்கும் சம்பந்தப்பட்ட நீதிவான் மேற்படி 'வாரண்ட்' உத்தரவைத் தப்பான எண்ணத்துடன் (Bad Faith) வழங்கினார் என்ற முடிவுக்கு வருவதற்கான ஆதாரங்கள், சாட்சியங்கள், முன்வைக்கப்படாத நிலையிலேயே அவரது கட்டளை தவறானது என்ற அடிப்படையில் சேவையிலிருந்து அவர் இடைநிறுத்தப்பட்டிருக்கிறார். இது அதிர்ச்சி தருவதாக உள்ளது. இந்த விவகாரத்தை மிகப் பரபரப்பான சூழலில் கடும் விவாதங்களுடன் - ஆராய்ந்த இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம், இதுகுறித்து அதிர்ச்சி தெரிவித்து, நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவரான பிரதம நீதியரசருக்கு முறைப்பாட்டுக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தது.

இந்த விடயத்தில் தலையிடுவது நீதிமன்றை அவமதித்த குற்றச்சாட்டுக்கு உள்ளாகக்கூடிய விடயம் என்ற பதிலடி பிரதம நீதியரசர் தரப்பிலிருந்து சட்டத்தரணிகள் சங்கத்துக்கு அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்நிலையில், நீதியின் மகத்துவமும் மதிப்பும் என்னவாகப் போகின்றன? அவை பிழைக்குமா என்ற கேள்வியே நெடிதாக உயர்ந்து நிற்கிறது.

# குடாநாட்டுக்கு சிங்கப்பூரிலிருந்து மின்கம்பங்கள் எடுத்துவர ஏற்பாடு

சிங்கப்பூரிலிருந்து இரும்பு மின்கம்பங்களை எடுத்துவருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மின் விளக்குகள் பொருத்துவது தாமதமடையலாம் என்று மின்சாரசபை யினர் கூறியதாக யாழ். மாநகர ஆணை யாளர் கலாநிதி க.குணராசா தெரிவித் துள்ளார்.

மாநகரசபைப்பகுதியில் மின்வளக்குகளை மீளப்பொருத்தும் இடங்களைக் கண்டறிவதற்காக மாநகரசபையினால் தெரிவுசெய்யப்பட்ட ஆலோசனைக்குழு உறுப்பினர்களின் கூட்டம் கடந்த 19 ஆம் திகதி யாழ். மாநகரசபை ஆணையாளர் அலுவலகத்தில் ஆணையாளர் கலாநிதி குணராசா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட மின சாரசபை உத்தியோகத்தர்களே மேற கண்டவாறு தெரிவித்ததாக மாநகர ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதி விளக்குகளை மீளப் பொருத்துவதற்கு 'நிக்கொட்' நிறுவனம் 68 லட்சத்து 54 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.


இந்த நிதியினைக் கொண்டு யாழ். ஆஸபத்திரி வீதியிலும் மற்றும் பல முக்கிய சந்திகளிலும் பொது இடங்களிலும் வெளிச்சம்கூடிய மின்விளக்குகளைப் பொருத்துமாறு யாழ். மாநகரசபை மின் சாரசபையிடம் கோரியிருந்தது.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வெளிச்சம்கூடிய அலங்கார மின்விளக்குகளைப் பொருத்துவதற்கான இரும்பு மின்கம்பங்கள் தென்னிலங்கையில் இல்லை என்றும், இதனால் மின்சார சபையினர் சிங்கப்பூரிலிருந்து பெற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளனர் என்றும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள முக்கிய சந்திகள் மற்றும் பொது இடங்கள் என்பவற்றில் மின் விளக்குகள் பொருத்தும் நடவடிக்கை அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படும் என்றும் -

முதற்கட்டமாக யாழ்ப்பாணம் பிரதான வீதியிலிருந்து மின்விளக்குகள் பொருத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கபபடும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (10-7)

# இலங்கை மின்சார சபையின் தலைவர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம்



இலங்கை மின்சார சபையின் தலைவர் ஆனந்த எஸ்.குணசேகர விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

நேற்றுக்காலை வருகைதந்த அவர் சுன்னாகத்தில் உள்ள மின்பொறியியலாளர் அலுவலகத்திற்குச் சென்று மின்பொறியியலாளரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பின்பு யாழ். பிராந்திய அலுவலகத்திற்குச் சென்றார்.

முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை மின்சாரசபையின் வடபிராந்திய அலுவலகத்திற்கும் சென்ற அவர் அங்கு நடைபெற்ற நவராத்திரி நிகழ்வில் கலந்துகொண்டார்.

தொடர்ந்து வடபிராந்திய மின்சார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் எஸ்.கமலநாதனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின்போது யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மின் இணைப்புகள் பறறியும் -

தொடர்ந்து மின் இணைப்பு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள பிரதேசங்கள் தொடர்பாகவும் மற்றும் மினசாரவசதிகளை நவீன மயப்படுத்துவது தொடர்பாகவும் - இலங்கை மின்சாரசபையின் தலைவர் கேட்டறிந்தார்.

இந்தச் சந்திப்பினை அடுத்து அவர் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத் திறகும், அங்குள்ள விகாரைக்கும் சென்றிருந்தார். (10-6)

## வெள்ளிவிழாவும் மலர்வெளியீடும்

விக்னா கல்விநிறுவனத்தின் வெள்ளி விழாவும் மலர்வெளியீட்டு வைபவமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விக்னா கல்வி நிறுவன அதிபர் லயன மு.ஜெயந்திக்குமார் தலைமையில் இடம் பெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா, திருமதி குணராசா ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக இந்துசமய விவகார அலுவலக உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம், நல்லூர் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன் ஆகியோரும் கலந்துகொள்வர். (4-202)

# 55 மருத்துவ மாணவர்கள் இறுதிப் பரீட்சையில் சித்தி

யாழ்ப்பாணம்,ஒக்.23

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து 55 மருத்துவர்கள் வெளியேறியுள்ளனர்.

கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற எம்.பி.பி.எஸ். இறுதிப் பரீட்சை முடிவுகள் பரீட்சைக் கிளையால் வெளியிடப்பட்டுள்ளன.

சித்தியடைந்தவர்களின் பெயர், விவரம் வருமாறு:-

★ இரண்டாம்தர மேல் பிரிவு
எ.பவானி, செல்வி எஸ்.பத்மநாதன்.

★ இரண்டாம்தர கீழ்ப் பிரிவு
எ.அன்ரன் ஜெனிஸ், ஜி.சி. குளோடியா ரதி, கே.இளஞ்செழியபால வன், ஈ.ஈ.ராஜவதனி லூனா, என்.கீர்தன், கே.ஜெயந்தன், பி.ஜோண்சன், வி.கலைச் செல்வி, ரி.கலைமகள், எஸ்.கலைவாணி, எஸ்.கவிதா, ஆர்.கிருஷாந்தி, பி.குமரேந்திரன், ஜி.நிலானி, எம்.பிரதீபன், ஆர்.பிரசாந்தி, பி.பிரதீபன், ரி.சர்மிளா, எ.சூரிகா, எஸ்.சுபதா, எஸ்.காந்தரூபன்

★ சாதாரண சித்தி:
கே.அனுஷா, கே.ஐங்கரன், வி. டெனிஸ், ரி.எழிலினி, பி.கீதாஞ்சலி, என். கீதாஞ்சலி, எஸ்.கோபிசங்கர், டபிள்யூ. ஜனா, எஸ்.ஜீவறஞ்சன், சி.ஜேசுராணி, கே.கிரிசுதன், வி.மணிவண்ணன்.

எம்.மயூரதன், ரி.நாரணி, என்.நிலோஜன், பி.புவிராசி, வி.ஆர்.சி.லம்பேர்ட், கே.சசிகலா, வை.சத்தியபாமா, எஸ்.சிவநந்தினி, கே.சுபதீஸ், என்.நிரோசன்.

எஸ்.தயாநிதி, எஸ்.துஷியந்தி, ஆர். முரளீஸ்வரன், எஸ்.கஜவதனி, எஸ்.அறிவுச்செல்வன், கே.மனோகரன், என்.சாந்தகுணாகரன், எ.விமலேஷ், யோசெப், ரி.மதுரா. (4-13-202)

# அம்மா! இசைத்தட்டு வெளியீடு




யாழ்ப்பாணம்,ஒக்.23

யாழ்ப்பாணம் நகுலேஸ்வரி பண்பாட்டு மேம்பாட்டு நிறுவனம் வழங்கும் பேராசிரியர் என்.சண்முகலிங்கனின் 'அம்மா' இசைத்தட்டு, இசைநாடா வெளியீடும் ஆக்க இசை அரங்கமும் விஜய தசமி தினமான இன்று காலை 10.00 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் சிறப்புவிருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ். மாவட்ட அரசியறறுறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வெளியீட்டுரையை கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும் மதிப்பீட்டுரைகளை பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருமதி நவதா் சினி கருணாகரன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (10)

## நாளை

ஐப்பசி 08
ஞாயிற்றுக்கிழமை
(24.10.2004)
திதி: ஏகாதசி
முற்பகல் 11.00 வரை
நட்சத்திரம் : சதயம்
முற்பகல் 1.11 வரை
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 09.02 - 10.32
ராகுகாலம் : 4.32 - 06.02
(பழைய நேரப்படி)

# பாடசாலை நூலக நாளையொட்டி அம்பாறையில் திங்களன்று விழா

யாழ்ப்பாணம்,ஒக்.23

அனைத்துலகப் பாடசாலை நூலக நாளையொட்டி நாளைமறுதினம் திங்கட கிழமை முற்பகல் 10 மணிக்கு அம்பாறை டி.எஸ்.சேனநாயக்கா மத்திய மகா வித்தியாலயத்தில் நூலகநாள் விழா நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கின் கல்வி வலயப் பாடசாலைகளில் உள்ள நூலகங்களில் மிகச்சிறநத நூலகங்களாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு இந்த விழாவில் விருதுகள், நூல்கள் மற்றும் சான்றிதழ்கள் என்பன வழங்கப்படவுள்ளன.

பிரதிக் கல்வியமைச்சர் மங்கள சமரவீர இந்தவிழாவில் கலந்துகொண்டு இவற்றை வழங்கவுள்ளார்.


யாழ். மாவட்டத்தில் இருந்து கீழ்க்காணும் 5 பாடசாலைகளின் நூலகங்கள் மிகச் சிறந்த நூலகங்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

வேம்படி மகளிர் கல்லூரி(யாழ். வலயம்), சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி (வலிகாமம் வலயம்), கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி. (தீவக வலயம்), சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி(தென்மராட்சி வலயம்), நெல்லியடி ம.ம.வி.(வடமராட்சி வலயம்).

தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரிய நூலகர்களை விழாவில் கலந்துகொண்டு விருதுகளைப பெற்றுக்கொள்ளுமாறு மாகாண இணைப்பாளர் ந.அனந்தராஜ் கேட்டுள்ளார்.(10)

## உதயவாக்கு

சோம்பேறித்தனம் பாவங்களுள் பெரிய பாவம்.




We are looking for a suitable candidate, with not less than 3 years experience in the above capacity. Should be able to manage the transport division independently. He will be directly answerable to the management in maintenance and movements of vehicles. Candidate with mechanical aptitude and transportation management will be given preference.

*Apply with full bio data and details of two non related referees.*

Send your applications on or before 29th October 2004

**DEPOT MANAGER,**
25, Brown Road, Jaffna.

## நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் தவில், நாதஸ்வர பயிற்சி வகுப்புகள்

யாழ். குடாநாட்டில் மங்கள வாத்திய இசையை மேலும் மேம்படுத்தும் முகமாக நல்லூர் இளங்கலைஞர் மன்றம் விஜயதசமி தினமான இன்று தவில், நாதஸ்வரக் கலைகளின் பயிற்சி வகுப்புகளை ஆரம்பித்து வைக்கவுள்ளது.

பிரபல நாதஸ்வர மற்றும் தவில் கலைஞர்களால் பயிற்சிகள் வழங்கப்படவுள்ள இப் பயிற்சி வகுப்பில் இணைந்துகொள்ள விரும்புவோர் மன்ற அலுவலகத்தில் தொடர்புகொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

(10-17)

**படிவம்**

உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் 2005இல் கற்கை நெறிகளைப் பயில்வதற்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் கிடைக்கும்.

விண்ணப்ப முடிவு திகதி:
19.11.2004
**BHARATHY PATHIPPAKAM,**
430, K.K.S. Road,
Jaffna. (சி-38440)

## வாழ்த்தி மகிழ்கின்றோம்

வெள்ளிவிழாக் காணும்
**விக்னா கல்வி நிறுவனம்**
ஞானமதில் ஞானியராய் விளங்கவைத்த விக்னாவே
விஞ்ஞானியாய் பொருளியலாளராய் விந்தை புரிய வைத்த விக்னாவே
களங்கமில்லாத சந்ததி தரணியில்
பல்லாண்டு வாழ விக்னாதாயே வாழி! வாழி!
என மனமார்ந்து வாழத்துகின்றோம்.

**O/L பகல் நேர வகுப்பு மாணவர்கள், பிரிவு - 04.**

(37883) (24-19-17)

## நியூ வீணா கானம் இசை மன்றம்

**புதிய இசை வகுப்பு ஆரம்பம்**

இன்று (23.10.2004) சனிக்கிழமை 4.30 p.m. - 7.00 p.m.

- ஓர்கன்
- கிற்றார்
- புல்லாங்குழல்
- பாட்டு
- வீணை
- வயலின்
- மெலோடிக்கா
- றெக்கோடர்

16/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 7729

(42-19-17-24) (37879)

## திருமண அழைப்பு

சிவமயம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் ஐப்பசி மாதம் 08ஆம் நாள் நாளை (24.10.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிமுதல் 11.30 மணிவரையுள்ள சதய நட்சத்திரமும், ஏகாதசி திதியும், சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்,

எமது புதல்வன்
திருவளர் செல்வன்
**கலைநேசன்**
(அகிலன்)
அவர்களுக்கும்

எமது புதல்வி
திருவளர் செல்வி
**ஜெயந்தி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:**

திரு.திருமதி வை.சங்கரநாதன்
சுங்க வீதி,
வல்வெட்டித்துறை.
T.P.: 0114815360
021 226 3509

திருமதி சத்தியவாணி செந்திவேல்
வேம்படி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.
T.P.: 077 6402498

(இரு வீட்டார் அழைப்பு) (37875) (24-19-17)

## யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்

கழகத்தின் சமூகசேவை நிதிக்காக நடத்தப்படும்

## "கிராமிய இசைநடன சங்கமம்"

இடம்: தம்பையா மண்டபம்
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை,
யாழ்ப்பாணம்.

காலம்: 27, ஒக்ரோபர் 2004 புதன் பிற்பகல் 2 மணி.

அன்பளிப்பு: 1,000/-
500/-
200/-

மாணவர்களுக்கு: 100/-

*(நுழைவுச் சீட்டுக்கள் மண்டப வாயிலிலும் றோட்டறிக் கழக உறுப்பினர்களிடமும் பெற்றுக் கொள்ளமுடியும்)*

(C/38478)(42-19-17-24)

வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவையின் உள்ளூராட்சித் திணைக்கள **நூலகப் பொறுப்பாளர் தரம் III, இலங்கை தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) வகுப்பு II'ஆ'**

## பதவிகளுக்கான ஆள்சேர்ப்புப் பரீட்சை - 2004

மேற்படி பதவிகளுக்கான விளம்பரம் 1362 ஆம் இலக்கம் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகுதி IV இல் மாகாண சபைகள் என்ற இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வறிவித்தலில் விண்ணப்ப முடிவுதிகதி 2004.11.01 ஆம் திகதி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் விண்ணப்ப முடிவு திகதி 2004.11.15 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**செயலாளர்,**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு - கிழக்கு மாகாணம்.

(C/38479)(42)

## திருமண அழைப்பு

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான தாரண வருடம் ஐப்பசி மாதம் 8ஆம் நாள் நாளை (24.10.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.26 மணிமுதல் 11.37 மணிவரை வரும் சதய நட்சத்திரமும் மகர லக்கினமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

எங்கள் புதல்வன் திருநிறை செல்வன்
**திருமாலன்**
(உரிமையாளர்,
திருமாலன் நகைத்தொழிலகம், பருத்தித்துறை)

அமரர் சு.நாராயணன் ஆச்சாரி
அவர்களின் பேர்த்தியும்
எங்கள் புதல்வி திருநிறை செல்வி
**வனிதா**

ஆகிய இருவருக்கும் திருமணம் நடத்தப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு யாழ். வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் இலட்சுமி நாராயணர் திருமண மண்டபத்தில் (பெருமாள் கோவில்) நடைபெறும். திருமண வைபவத்திற்கு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசிர்வதித்து வாழ்த்தி அருளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**வரவேற்புபசாரம் மணமகன் இல்லத்தில் திங்கட்கிழமை 25.10.2004 மாலை 4.00 மணிக்கு.**

தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி ஜெகதீஸ்வரி, புவிராஜசிங்கம்,
திரு.திருமதி பு.திருக்குமரன் (சகோதரன்),
திரு.பு.திருச்செல்வன் (சகோதரன்),
விஸ்வகுல வீதி,
புலோலி வடக்கு, பருத்தித்துறை.

திரு.திருமதி நா.பாலசுப்பிரமணியம் (ஆச்சாரி தம்பதிகள்),
திரு.திருமதி பா.நாகராஜன் தம்பதிகள் (சகோதரன்),
திரு.பா.சந்திரன் (சகோதரன்),
திரு.மு.இராஜலிங்கம் தம்பதிகள் (பிரான்ஸ்),
ஜெயதுர்க்கா நகையகம், மல்லாகம்,
நாகேஸ்வரி வீத்தியாலயம்,
பருத்திக்கலட்டிலேன், சுன்னாகம்.

(இருவீட்டார் அழைப்பு)

(37758)(39-19-17-24)

## BOC

**இலங்கை வங்கியில் சிறுவர் சேமிப்புக் கணக்குகளை [ரன் கெக்குளு] வைத்திருக்கும் சிறார்களே**

நீங்கள் 2004ஆம் ஆண்டு 5ஆம் வகுப்பு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில்:

- மாவட்டத்தின் முதல் 10பேரில் ஒருவரா?
- அல்லது முழுநாட்டின் 500 பேரில் ஒருவரா?
- உங்கள் கணக்கில் ரூ.2500/- நிலுவையாக, நீங்கள் பரீட்சை எடுத்த நாளிலிருந்து உள்ளதா?

அப்படியானால் உடனடியாக நீங்கள் கணக்கு வைத்திருக்கும் இலங்கை வங்கிக் கிளை முகாமையாளரைச் சந்தித்துப் புலமைப் பரிசுக்கு விண்ணப்பிக்கவும். **'உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி'**

**இலங்கை வங்கி,**
**வடபிராந்தியம்,**
**யாழ்ப்பாணம்.**

(C/38471)(42-19-17-24)

யாழ். பல்கலைக்கழக
விஞ்ஞான பீடம்
30 ஆம் ஆண்டு நிறைவு

மாபெரும்



விஞ்ஞானக் கண்காட்சி

ஒக்ரோபர் 26ஆம் திகதி முதல் 30ஆந் திகதி வரை

ஊடக அனுசரணை
உதயன்
அனுசரணை
SAAMSTECH

# நகரில் சட்டவிரோதமாக இயங்கிவந்த கொல்களம் முற்றுகையில் சிக்கியது

யாழ்ப்பாணம்,ஒக்.23

யாழ். நகரின் மையப்பகுதியில் சுறாப்பள்ளி வீதியில் பாழடைந்த கட்டடம் ஒன்றில் சட்ட விரோதமாக இயங்கிவந்த மாடுகள் கொல்களம் சுகாதாரப் பகுதியினரின் முற்றுகைக்குள்ளானது.

யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியினரும் தமிழீழ சுகாதாரப் பகுதியினரும் இணைந்து மேற்கொண்ட திடீர் முற்றுகையில் இந்தக் கொல்களம் சிக்கியது.

சட்டவிரோதமாக, மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தாமல் மாடுகள் இக்கொல்களத்தில் கொல்லப்பட்டு, அந்த இறைச்சி விற்பனை செய்யப்படுவதாகக் கிடைத்த முறைப்பாடு ஒன்றை அடுத்தே இத்தேடுதல் நடத்தப்பட்டது.

சோனகதெருவில் சுறாப்பள்ளி வீதியில் செயற்படும் இந்தக் கொல்களத்தில் மாடுகள் வெட்டி அகற்றப்பட்ட கழிவுகளும் காணப்பட்டன.

இந்தக் கொல்களம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (3)



கொல்களம் அமைந்திருந்த பாழடைந்த வீட்டையும், மாடுகளின் கழிவுகளையும் படத்தில் காணலாம்.

# சிகிச்சைக்காக நீண்டநேரம் காத்திருக்கும் நோயாளிகள்

வலி.தெற்கு,ஒக்.23

தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் உளநலம் பாதிக்கப்பட்ட மன நோயாளர்களுக்கான கிளினிக்கில் சிகிச்சைபெறச் செல்லும் மன நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்கு நீண்டநேரம் காத்திருக்கவேண்டியதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

வாரத்தில் திங்கட்கிழமையன்றும் வியாழக்கிழமையன்றும் முற்பகலில் நடைபெற்றுவரும் இச்சிகிச்சைகிளினிக்கில் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பெரும் எண்ணிக்கையானவர்கள் சிகிச்சைபெற வருகின்றனர்.

காலை 8.30 மணியளவில் சிகிச்சைக்கு செல்லும் நோயாளர்கள் டாக்டரின் வருகைக்காக 12 மணி வரை காத்திருக்க வேண்டியுள்ளது. பின்பு சிகிச்சைபெற்று மருந்துகளை வெளி நோயாளர் பிரிவில் பெற்று, வீடு திரும்புவதற்கு நேரம் சென்றுவிடுகின்றது.

காலை உணவு, தேநீர் என்பன இல்லாமல் இந்த உளநலம் பாதிக்கப்பட்டவர்கள் பெரும் சிரமமடைவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுக்கான சிகிச்சையைத் தாமதமின்றி வழங்கினால் நல்லது என்று அவர்களை அழைத்துச் செல்லும் உறவினர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்

(எ-135)

# அரச வைத்தியசாலை ஆய்வுகூட ஊழியர்கள் வியாழன் தொடக்கம் வேலைநிறுத்தத்தில்!

கொழும்பு,ஒக்.23'

கொழும்பிலுள்ள அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஆய்வுகூட ஊழியர்கள் நேற்றுமுன்தினம் முதல் சுகவீன லீவுப்போராட்டத்தில் குதித்துள்ளனர்.

கடந்த ஒகஸ்ட் மாதம் முதல் இவர்களுக்குரிய மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே தாம் இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என வைத்தியசாலை சிற்றூழியர் சங்கத் தலைவர் ஜெயசேகர தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

'சிற்றூழியர் சங்கத்துடன் இரசாயன ஆய்வுகூட உத்தியோகத்தர்கள் 'எக்ஸ்கதிர்' பிரிவு, மஹறகம புற்றுநோய் பிரிவு ஆகியவற்றின் ஊழியர் சங்கங்களும் இணைந்து இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கொழும்புத் தேசிய வைத்தியசாலை, மஹறகம புற்றுநோய் சிகிச்சை பிரிவு, கொழும்பு மத்திய இரத்தப் பரிசோதனை நிலையம் போன்றவற்றில் மாலை 4 மணிக்குப் பின்னர் மேலதிகமாக சேவை செய்யவேண்டியுள்ளது. இம்மேலதிக நேரத்திற்காக நாம் சமர்ப்பித்த கொடுப்பனவுப் பட்டியல் நிராகரிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சர் எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் எமக்கு உரிய பதில் தராவிடின் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நாடு முழுவதும் இப்போராட்டத்தை முன்னெடுக்கப் போகின்றோம். - என்றார்.

# இந்திய இராணுவத் தளபதி அடுத்தமாதம் இலங்கை வருகிறார்

கொழும்பு,ஒக்.23

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் நிர்மல் சந்தர் விஜ் அடுத்தமாதம் முதல்வாரத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கோட்டேகொடவின் அழைப்பின் பேரில் அவர் இலங்கை வருகிறார் என இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

இந்திய இராணுவத் தளபதி நான்கு நாள்கள் இலங்கையில் தங்கியிருப்பார். ஜனாதிபதி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் முப்படையின் தளபதிகளைச் சந்தித்து அவர் பேசுவார்.

அண்மைக்காலமாக இந்திய உயர் இராணுவ அதிகாரிகள் இலங்கைக்கு அடிக்கடி விஜயம் மேற்கொண்டு வருகின்றனர். இலங்கையின் இராணுவ நலன்சார்ந்த விடயங்களில் இந்தியாவின் கரிசனை அதிகரித்து வருவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# இராவணன் சிங்கள மன்னன்! அடித்துக் கூறுகிறார் அமைச்சர்

கொழும்பு,ஒக்.23

'உலகுக்கு விமானத்தை அறிமுகப்படுத்திய இராவணன் சிங்களவரின் முதலாவது அரசன், அவன் அறிமுகப்படுத்திய பின்னரே உலகம் விமானத்தைக் கண்டுபிடித்தது. அவன் வழியில் வந்த சிங்கள இனம் பல சாதனைகளைச் செய்துள்ளது'.

- இப்படி அடித்துக் கூறுகிறார் பிரதி தொழில் அமைச்சர் மேர்வின் சில்வா.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் முன்னாள் பிரதிச் சபாநாயகர் காமினி பொன்சேகாவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் கொண்டுவரப்பட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேர்வின் சில்வா இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

விதிய பண்டார என்ற அரசன் 99 யுத்தங்களை வென்று சாதனைப் படைத்தான். இந்தியாவிலிருந்து 12ஆயிரம் பேரை கொண்டுவரும்படி இலங்கையில் இருந்த மன்னன் உத்தரவிட்டான். அங்கிருந்து 24ஆயிரம் போர் வீரர்களை பலாத்காரமாக அழைத்துவந்த வரலாறும் உண்டு. இது போன்று பல வரலாற்று நிகழ்வுகள் பற்றி மகாவம்சம் கூறியுள்ளது.

இந்தச் சபையில் என்னை தூசித்தமை போன்றே அநாகரிக தர்மபாலாவையும் பலர் தூறநினார்கள். இன்று அவரைப் போற்றுகிறார்கள்.

56ஆம் ஆண்டு புரட்சியின் மூலம் நான் அரசியலுக்கு அடித்து வரப்பட்டவன்.

இந்தப் பூமியில் மனிதர்கள் பிறக்கிறார்கள், இறக்கிறார்கள். ஆனால், எல்லோருடைய பெயரும் வரலாற்றில் இடம்பெறுவது இல்லை.

மகாத்மாகாந்தி, மார்ட்டின் லூதர்கிங் போன்றோரின் பெயர்களை வரலாற்றில் இருந்து அழிக்க முடியாது. அந்த வகையில் காமினி பொன்சேகாவின் பெயரும் இலங்கை வரலாற்றில் இருந்து ஒதுக்க முடியாதது.

அவர் ஐ.தே.கட்சியின் எம்.பியாக இருந்திருந்தபோதும், அவர் தமது சபாநாயகர் கடமையின் போது கட்சிசார்பாகச் செயற்படவில்லை. காமினி பொன்சேகா, தமது கணவர் விஜய குமாரதுங்கவின் நண்பர் என்பதற்காக அவருக்கு ஆளுநர் பதவியை வழங்கி ஜனாதிபதி கௌரவித்தார் - என்றார் அவர்.

# சமூகசேவை செய்வதில் முன்னின்றவர்



ஒருவர் தான்பிறந்த மண்ணில் அதுவும் தனது கிராமத்தை உயர்த்த வேண்டும் - அபிவிருத்தி செய்யவேண்டும் - கிராம மக்களுக்குச் சேவைசெய்ய வேண்டும் என்பதில் மும்முரமாக ஈடுபட்டு வருவது வரவேற்கத்தக்கது.

அந்தவகையில் தனது முழுநாள் வாழ்க்கையிலும் சமூக அமைப்புக்களில் இருந்து சேவையாற்றியவர் நீர்வேலி தெற்கைச் சோந்தவரான அமரர் சுப்பிரமணியம் தெய்வேந்திரம் அவர்கள்.

1950 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி பிறந்த இவர் இறைபக்தி மிகுந்தவராகக் காணப்பட்டார்.

இவர் மல்லாவிப் பிரதேசத்தில் போர் எழுச்சிக்குழு மற்றும் மாவீரர் செயற்பாட்டுக் குழுக்களின் தலைவராகவும், பணியாற்றியவர். இக்காலத்தில் இவரது சேவை மகத்தானதாக இருந் தது.

## நீத்தார் நயப்புரை

அத்துடன் இவர் நீர்வேலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், விவசாய சம்மேளனம், அத்தியார் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் போன்றவற்றில் உறுப்பினராகவும் நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலய நிர்வாக சபையின் தலைவராகவும் இருந்து மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளார்.

- பா.நந்தகுமார்.-

# நூல் வரிசை



நூல் : ஜ:ப்னா ஸ்கிறபிளர் (Jaffna Scrabbler - Volume - I)

வெளியீடு : யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஸ்கிறபிள் கழகம்

ஆலோசனை ஆசிரியர் : சி.அன்ரன் ஜெயறாஜ்

மாணவ ஆசிரியர்கள் : சி.நிரஞ்சனன், எஸ்.கஜேந்திரன்.

ஆங்கிலத்தின் தேவை இன்று தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. பூகோள ரீதியாக சமூகத்தின் ஊடகமாகக் காணப்படும் ஆங்கில மொழி, எமது மண்ணில் தாய் மொழிக்கு அடுத்து இரண்டாவது மொழியாக முக்கியம் பெற்று விளங்குகின்றது. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஆங்கில மொழியில் கற்பித்தல்கள், விரிவுரைகள் இடம்பெற்று வருவதனால் எமது மாணவர்கள் உலகினையும், உலகம் எமது மாணவர்களின் திறமைகளையும் உணர்ந்துகொள்ளமுடிகிறது.

எமது தாய் மொழிக்கும் ஆங்கில மொழிக்கும் இடையே காணப்படும் கட்டமைப்பு வேறுபாடுகள் - நாம் வாழும் சமூகச்சூழல் - ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறைவு, புலமை வாய்ந்த ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறைவு - ஆங்கிலத்தின் அவசியம் உரிய முறையில் மாணவர்களுக்கு உணர்த்தப்படாமை போன்ற காரணங்களால் ஆங்கிலம் எமது மாணவர்களிடம் ஒரு சுமையாகவே சுமத்தப்பட்டு வருகின்றது எனலாம்.

இவற்றிற்கு அப்பால், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியானது மாணவர்கள் ஆங்கிலத்தை ஆர்வத்துடன் கற்பதனை ஊக்கப்படுத்தும் முயற்சியாக, சர்வதேச ரீதியில் கல்வியியலாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில சொற்பதங்களுடன் தொடர்புடைய உள்ளக விளையாட்டான Scrabble ஐ அறிமுகம் செய்துள்ளனர். இலங்கையின் ஏனைய பாகங்களில் பல பிரபல்யமான பாடசாலைகளில் பத்து வருடங்களுக்கு மேலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இம்மொழி அடிப்படையிலான விளையாட்டு, அவர்களுக்கு உரிய பலனை வழங்கி வருவது கண்கூடு.

யாழ். மாவட்டத்தில் உள்ள மாணவர்களின் தேவை உணர்ந்து தாம் பெற்ற அனுபவம் - அறிவு என்பவற்றுடன் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட நூலாக Jaffna Scrabbler பாகம் - I காணப்படுகின்றது. Scrabble என்ற விளையாட்டினை அனைவரும் இலகுவாக அறிந்துகொள்ளவும், அதன் அடிப்படை நுட்பங்களை எளிதில் புரிந்துகொள்ளவும், இதன் மூலம் ஆங்கில மொழியில் தமது சொல்லறிவை அதிகரித்துக்கொள்ளவும் ஏற்றவகையில் இந்நூல் விளங்குகின்றது. அழகிய வர்ணமுகப்புடன் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட Jaffna Scrabbler, Volume - I' ஆங்கிலத்தை தம்வசப்படுத்திக்கொள்ள விரும்பும் அனைவருக்கும் உரிய ஒன்றாகும்.

- வே.கருணாநிதி

(சிரேஷ்ட விரிவுரையாளர் - ஆங்கிலம்)



நூல் : ஸ்ரீ செல்வசந்நிதி ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட சிறப்பு மலர்.

வெளியீடு : சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப்பேரவை.

சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப்பேரவை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவினை முன்னிட்டு சிறப்புமலர் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

முன் அட்டையில் ஆலயத்தின் முகப்புத்தோற்றத்தினையும், பின்புற அட்டையிலே அழிக்கப்பட்ட சித்திரத்தேரினையும் கொண்டுள்ள இந்த மலர் சந்நிதி முருகனதும், அவன் ஏறி உலாவரும் தேரினதும் தனித்துவங்களினை எடுத்து விளக்கும் ஒரு நூலாகக் காணப்படுகின்றது.

இம்மலரில் புதிய சித்திரத்தேரின் பாகங்கள், அவற்றை உருவாக்கிய சிற்பாசிரியர்கள், செல்வச்சந்நிதி முருகன் பழைய கட்டுத்தேரில் உலாவரும் காட்சி போன்றன பல வர்ணப் புகைப்படங்களுடன் அச்சிடப்பட்டுள்ளன. இம்மலரில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் 'தேரினது தத்துவத்தை கட்டுரை, புராணங்களூடாக விளக்கி எழுதியுள்ளமை சிறப்பாகவுள்ளது. "புதிய சித்திரத்தேர் உருவாகிய அற்புத வரலாறு" என்ற ந.அரியரத்தினத்தின் கட்டுரை முருகப்பெருமானின் சிறப்பினை எடுத்துவிளக்குகின்றது. தொடர்ந்து சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் எழுதியுள்ள 'அருள்சுரக்கும் சந்நிதி ஆலயம்' என்னும் கட்டுரை இம்மலருக்கு மேலும் மெருகூட்டுகின்றது. இன்னும் பல கட்டுரைகளையும் கவிதைகளையும் கொண்டதாய் இம்மலர் வெளிவந்துள்ளது.

சரஸ்

பற்களின் வெண்மைக்கு

**அன்னா பற்பொடி**



பாவனையாளர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!



இலவசம்

அன்னா பற்பொடியின்

**50 வெற்றுப் பக்கற்றுக்களை**

உங்கள் வாடிக்கைக் கடைகளிலோ அல்லது எமது விற்பனை வான்களிலோ கொடுத்து ஒரு கவர்ச்சிகரமான **தொப்பியை** இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்!

(சி-38292) (24-1-44)


# முதிய விவசாயிக்குப் பாராட்டு விழா

முதிய விவசாயியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.க.முதலியாருக்கு உடுவில் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட விவசாய சம்மேளனங்களால் பாராட்டு விழா நடத்தப்பட்டுள்ளது.

சிறந்த முதிய விவசாயியாகத் தெரிவுசெய்யப்பட்டமையைப் பாராட்டி முதலியாருக்கு உடுவில் பிரதேச விவசாய சம்மேளனங்கள் சார்பில கடந்த செவ்வாய்க்கிழமை விழா நடத்தப்பட்டது.

உடுவில் கமநல சேவை நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்குக் கமநல சேவை நிலையக் குழுத் தலைவர் செ.இலகுநாதன் தலைமை வகித்தார்.

யாழ்ப்பாணம் கமநல சேவைகள் திணைக்கள சிரேஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் கே.ஆனந்தராசா, உடுவில் பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். சோதிநாதன், விவசாய போதனாசிரியர் எஸ். சிவநேசன், இணுவில் விவசாய சம்மேளனத் தலைவர் எஸ். திருக்குமார் உட்படப் பலர் முதலியாரின் சேவைகளைப் பாராட்டி உரை நிகழ்த்தினர். (10-152)


## டிஜிட்டல் அல்பம் தயாரித்தல்!!!

டிஜிட்டல் இமேஜ், பிளைமவுண்ட் பிறேமிங், கூல், டியூரோ, அல்ப லமினேசன் வேலைகள் அவசர தேவைக்கான அல்ப வேலைகள் குறித்த நாளில் செய்து வழங்குகின்றோம்.

யாழ். ஒளி வீடியோ புகைப்பட சேவை

**K.S.R. PHOTOS**

இல. 05. கனகபுரம்தெரு, கிளிநொச்சி.
T.P.: 021 228 5001

776, K.K.S. வீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P.: 0214590609

(37738)(39-19-44-24)



## ஊழியர் தேவை

பொருள்களைப் பொதிசெய்து விநியோகம் செய்யக்கூடிய முன்னனுபவம் வாய்ந்த ஊழியர் தேவை. திறமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும். உறவினர் அல்லாத வர்த்தக உரிமையாளர் அல்லது கிராமசேவகரின் சிபார்சுக் கடிதம் மற்றும் உமது சுய விவரத்துடன் நேரில்வரவும்.

*சம்பளம்:*

நல்ல அனுபவமுள்ளவருக்கு மாதம் 7,000/= வழங்கப்படும்.

**சிவா நறுமணப் பூங்கா**

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-38426) (24-19-44)

தொ.பே.இல: 222 2567



## OBTAIN A DEGREE
## to make a career in Australia

அவுஸ்திரேலியாவில் கற்கைநெறிகளை மேற்கொள்ள

**பட்டம் பெறுங்கள்**

Obtain a Bachelor or a Postgraduate degree from a " TOP" University, if you are looking for a career in Australia. The University you graduate from is all important to future career prospects in Australia.

**We now represent 10 Australian Universities (of which 5 are Go8) in 5 States & ACT**

University of Newcastle
University of South Australia
Flinders University of South Australia
Edith Cowan University
Swinburne University

* University of Melbourne
* University of Sydney
* University of Adelaide
* Australian National University, Canberra
* University of Queensland

* "Go8" Universities

Apply now for Feb 2005 intake

edlocate
EDUCATION AUSTRALIA

Contact Representative
Mr. S. Pathmanathan
"Eraham" Potpathy Road, Kokuvil.
Tel : 0777 252204
E-mail : sopa1404@yahoo.co.uk



## பணிநிலை வேண்டுகை

போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் சோதனை நிலையங்களுக்கு எழுதுநர் பணிநிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

தகைமை:

01) க.பொ.த. (சா/த) தமிழ், கணிதம் உட்பட ஆறுபாடங்களில் தேர்ச்சி

02) க.பொ.த. (உ/த) மூன்று பாடங்களில் தேர்ச்சி

ஊதியம்: நேரில் தீர்மானிக்கப்படும்.

தகுதி உடையவர்கள் (இருபாலரும்) 2004-11-01ஆம் திகதிக்கு முன்னர் தனி வரலாற்றுச் சான்றிதழ்களுடன் நடுவப் பணியகம் போ.க. பிரிவு கிளிநொச்சி என்னும் முகவரிக்கு வருக.

**போ.க.பிரிவு,**
**கிளிநொச்சி.**

(சி-38460) (26-11-46)



### திக்கம் மத்திய சன சமூக நிலையத்தால் அமைக்கப்பட்ட

# திக்கம் கலாசார மண்டபம் திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும் - 2004

இடம் : நிலைய வளாகம்

காலம் : 23.10.2004 சனிக்கிழமை பி.ப.3.00 மணி

தலைவர் : க.சுதேஸ்
(தலைவர், திக்கம் ம.ச.சமூக நிலையம்)

*பிரதம விருந்தினர்*

- திரு.ஆ.சிவசுவாமி (மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

*சிறப்பு விருந்தினர்கள*

- திரு.சி.இளம்பரிதி (அரசியல்துறைப் பொறுப்பாளர், யாழ். மாவட்டம்)
- திரு.M.K.சிவாஜிலிங்கம் (நாடாளுமன்ற உறுப்பினர், யாழ். மாவட்டம்)
- திரு.K.சுரேஷ் பிரேமச்சந்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர், யாழ். மாவட்டம்)
- திரு.G.G.கஜேந்திரகுமார் (நாடாளுமன்ற உறுப்பினர், யாழ். மாவட்டம்)
- திரு.செ.கஜேந்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர், யாழ். மாவட்டம்)
- திரு.மாவை சேனாதிராஜா (நாடாளுமன்ற உறுப்பினர், யாழ். மாவட்டம்)
- திரு.மா.க.ஈழவேந்தன் (நாடாளுமன்ற உறுப்பினர், யாழ். மாவட்டம்)
- திரு.ந.ரவிராஜ (நாடாளுமன்ற உறுப்பினர், யாழ். மாவட்டம்)
- திருமதி பத்மினி சிதம்பரநாதன (நாடாளுமன்ற உறுப்பினர், யாழ். மாவட்டம்)
- திரு.கி.சிவனேசன (நாடாளுமன்ற உறுப்பினர், யாழ். மாவட்டம்)

கௌரவ விருந்தினர்கள்

- திரு.வே.கணேசமூர்த்தி (திக்கம்)
- திரு.கே.இராசையா (பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம்)
- திரு.த.வசந்தகுமார் (பிரதேச செயலர், பருத்தித்துறை)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*திக்கம் மத்திய சனசமூக நிலைய சமூகம்.*

(37811)

விழா சிறப்புற வாழ்த்துவோர்

**மருதம் இரும்பகம், மருதம் தொலைத்தொடர்பகம்**
மத்திய மகாவித்தியாலய வீதி, நெல்லியடி.

**ஜெயா மோட்டோர்ஸ், ஜெயா சவுண்ஸ் சேவிஸ்**
கொடிகாம வீதி, நெல்லியடி.

**இந்திரா கபே, கணேசன் ஹாட்வெயார்**
பிரதான வீதி, நெல்லியடி.

**ஸ்ரீ கிருஷ்ணா கிறீம் ஹவுஸ்**
கொடிகாம வீதி, நெல்லியடி.

**யசோ புடைவை மாளிகை**
பிரதான வீதி, நெல்லியடி.

விழா சிறப்புற வாழ்த்துவோர்

**ஈஸ்வரி நகைமாளிகை**
பிரதான வீதி, பருத்தித்துறை.

**ஆனந் மணப்பந்தல் சேவை**
(வீனஸ் பலஸ்)
முருகன் கோவில் வீதி, நெல்லியடி.

**இரத்தினா ஸ்ரோர்ஸ்**
திக்கம் மாணாண்டி சந்தை, திக்கம்.

**தம்ரோ ஏக விநியோகஸ்தர் ஜமுனா ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி, நெல்லியடி.

**கே.கே.ரட்ணம்ஸ் ஸ்ரோர்ஸ்**
மக்கள் சந்தை, பருத்தித்துறை.

# சமையல் கலையை நவீனப்படுத்த சிங்கர் நிறுவனம் புதிய திட்டம்

## அதன் உற்பத்தி முகாமையாளர் தெரிவிப்பு



மனிதர்களுக்கு ஏற்பட்டுள்ள இயந்திர வாழ்க்கையில் நேரம் என்பது அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. என்ன தான் வேலைகளை மிகவேகமாகச் செய்தாலும் சமையலைப் பொறுத்தவரையிலே நேரம் அதறகுள்ளேயே முடங்கிப்போய் விடுகின்றது.

இதற்கு ஒரு விடிவே இல்லையா என ஏங்கிக் கொண்டிருந்தவர்களைத் தட்டியெழுப்பி, முன்னைய காலங்கள் போன்று சமையலறையில் அதிக நேரத்தைச் செலவிடவேண்டியதில்லை. இப்போது அவற்றை வெகு விரைவாகவும் இலகுவாகவும் செய்வதற்கு ஏற்ற நவீன சமையல் உபகரணங்கள் பாவனைக்கு வந்துளளன என்பதனை 'சமையல் செய்முறைக் காட்சி' மூலம் எமக்கு விளக்கியவர்கள் தான் சிங்கர் நிறுவனத்தினர்.

இவர்கள் கடந்த 16 ஆம், 17 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் இச்செய் முறைக் கண்காட்சிகளினை நடத்தினார்கள்.

அப்போது அங்கு வந்திருந்தவர்களான, சிங்கர் நிறுவனத்தின் நவீன - மின்சாரத்தில் இயங்கத்தக்க சமையலறை உபகரண உற்பத்தி முகாமையாளர் நிஷந்த ராஜபக்ஷ மற்றும் பயிற்றுவிப்பாளரான திருமதி சுஜீவ விதான ஆகியோரிடம் அவர்களின் நிறுவனம் தொடர்பாகவும், பயிற்சிப் பட்டறையினை நடத்தியதன் நோக்கம் என்னவென்றும் கேட்டோம். அவர்கள் கூறிய கருத்துகள் இங்கு பிரசுரமாகின்றன.

**நிஷந்த ராஜபக்ஷ**
**(உற்பத்தி முகாமையாளர்)**

எமது மக்கள் சரியானமுறையில் மின் உபகரணங்களைப் பயன்படுத்துவதற்குப் போதிய அறிவுரைகள் வழங்கப்படுவதில்லை. இந்நிலை மின் உபகரணங்களின் தேக்க நிலைக்கு வழிவகுக்கின்றது.

இந்தவகையிலே, சிங்கர் தயாரிப்புகளான பிரசர் குக்கர், மைக்ரோ அவர்ன் ஆகியவற்றின் பாவனை முறைகளையும் அவற்றினால் பெறக்கூடிய நன்மைகளையும் யாழ்ப்பாண மக்களுக்கு விளக்கிச் சொல்வதே எமது இம் முயற்சியின் நோக்கம்.

இம்முயற்சியில் பூரண வெற்றியை அடையும் நோக்குடன் இவ் இருநாள் பயிற்சிநெறியினை நடத்தினோம். இதற்குச் சிங்கர் நிறுவன யாழ். கிளை ஊழியர்கள் பெரும் ஒத்துழைப்பை வழங்கினார்கள். இப்பயிற்சிப் பட்டறைக்கு வந்தவர்களின் தொகையைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது யாழ்ப்பாணப் பகுதிகளில் இவ்விதமான சமையலறை உபகரணங்களின் பாவனை மிகக் குறைவாகவே இருப்பதாக எண்ணமுடிகிறது. இதனைக் கருததிற் கொண்டு யாழ். பகுதி மக்களுக்கு இந்தவித நவீன சமையலறை உபகரணங்களின் பாவனை முறைகளையும் அவற்றினால் பெறத்தக்க நன்மைகள் பற்றியும் விளக்கிக் கூறுவதே எமது நோக்காக இருக்கின்றது.

**திட்டம்**

உண்மையில் நாம் யாழ். கிளையினூடாக இப்பணியில் சிலரைப் பயிற்றுவிக்கவுள்ளோம்.



எமது நிறுவனத் தயாரிப்புகளை யாழ். மக்கள் பயன்படுத்தும் வேளையில் ஏற்படும் சிரமங்களுக்குக் கொழுமபிலிருந்து விளககங்களை அளிபபது மிகவும் சிரமம். எனவே, இவ்வித அவசர தேவைகளின்போது வாடிக்கையாளர்களுக்கு உதவும்வகையில் நாம் இங்கேயே ஒரு குழு வினைப் பயிற்றுவித்துப் பேணிவரத் திட்ட மிட்டுள்ளோம். பெரும்பாலும் எதிர்வரும் ஜன வரி மாதமளவில் இப்பணியினை ஆரம்பிக்க முடியும் என நம்புகின்றோம்.

132 வருடங்கள் பழைமைவாய்ந்தது எமது சிங்கர் நிறுவனம். இதன் காரணமாகவே பெரும்பாலான சிங்கள மக்கள் எமது நிறுவனத் தயாரிப்புகளில் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர்.

**- கங்கா -**

பொதுவாக, ஒரு குடும்பத்தின் அவசியப் பாவனைப்பொருள்கள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் தயாரித்து வழங்குவதில் எமது நிறுவனம் நாட்டில் முதலிடம்வகிக்கின்றது. இதனைக் கூறிக்கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது சிங்கர் நிறுவனத்தினர் குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி, துணி சலவை

(11 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய பயிற்சித் திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது என்.ஐ.ஐ.ரி

முன்னணி மென்பொருள் மற்றும் பயிற்சி நிறுவனமான NIIT அதன் உயர்மட்ட Futurz-Classic பயிற்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. மிகவும் பிந்திய ஈ.வர்த்தகம் மற்றும் கணனித் தொழில்நுட்பத்தை இது உள்ளடககுவதாகும். இத்திட்டத்தின்படி இதில் இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கு Microsoft, Oracle மற்றும் Sun Micro systems முதலியவற்றுடனான தொழில்நுட்பக்கலை பயிற்றுவிக்கப்படும்.

இந்தப் புதிய திட்டத்தைப் பற்றி NIIT நிறுவனத்தின் சர்வதேசக் கல்வி, தொழில் பணிப்பாளா வருண்கண்ணா தெரிவிக்கையில், அடுதது வரும் 2-3 ஆண்டுகளில் தொழில்வாய்ப்புகளை எதிர்பார்க்கும் மாணவர்கள் Futurz Classic திட்டத்தின் மூலம் பெருமளவில் பயனடைவார்கள் என்று கூறினார்.

தொழில்வழங்குநர்கள் தகவல் தொழில்நுட்பத்தில் பூரண அறிவுள்ளவர்களையே எதிர்பார்க்கிறார்கள் என்பதால், சிறப்பாகத் தொழில் வாய்ப்புகளை எதிர்பார்க்கும் மாணவர்கள் மத்தியில் இத்திட்டம் பெரும் வரவேற்பைப்பெறும் என்று நம்புவதாகவும் அவர் கூறினார்.

Futurz Classic திட்டத்தில் மென்பொருள் பொறியியல் கோட்பாடுகளும் இணைக்கப்பட்டுள்ளன. எனவே, மாணவர்கள் எதிர்கொள்ளும் மென்பொருள் பிரச்சினைகளை அவர்களே உடனுக்குடன் தீர்த்துக்கொள்வதற்கான அறிவைப் பெறுவார்கள்.

(ப)

# சிக்கன தினத்தை ஒட்டி விசேட பரிசில் திட்டம்

## தேசிய சேமிப்பு வங்கி ஏற்பாடு

சாவதேசச் சிக்கன தினத்தை ஒட்டி விசேட பரிசுத் திட்டம் ஒன்றைத் தேசிய சேமிப்பு வஙகி அறிமுகஞ்செய்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் தேசிய சேமிப்புக் கணக்குகளை நடைமுறைப்படுத்தும் அஞ்சலகங்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன், சேமிப்பு வங்கியில் வைப்பிலிடும் வாடிக்கையாளர்களுக்கும் பரிசில்கள் கிடைக்கும்.

அஞ்சலகத்திற்கான பரிசு தேசிய மட்டத்தில் அஞ்சலகங்கள், உப அஞ்சலகங்கள் என்ற ரீதியிலும் மாவட்ட மட்டத்தில் தேசிய சேமிப்பு வங்கியின் 28 மாவட்டக் கூறுகளின் அடிப்படையிலும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

வாடிக்கையாளருக்கான பரிசில் அகில இலங்கை ரீதியில் குலுக்கல்முறையில் தெரிவு செய்யப்படும்.

முதலாம்பரிசாக 7லட்சம் ரூபா பெறுமதியுடைய மாருதிக் காரும், இரண்டாம் பரிசாக ஒரு லட்சம் ரூபா பணப்பரிசும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம்ரூபா பெறுமதியான பணப் பரிசும் வழங்கப்படவுள்ளன.

சர்வதேச அஞ்சல் தினமான ஒக்ரோபர் 9 ஆம் திகதி தொடக்கம் இம்மாதம் 26 ஆம திகதிவரை நடைமுறைப்படுத்தப்படும் அஞ்சல் தேசிய சேமிப்பு வங்கிக் கணக்குகளை அடிப்படையாக வைத்துப் பரிசுத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. தேசிய சேமிப்பு வங்கியின் புதிய பரிசுத் திட்டத்தில் இணைந்துகொள்வதற்கு ஒக்ரோபர் 9ஆம திகதிக்கும் 26 ஆம் திகதிக்கும் இடையில் அஞ்சலகச் சேமிப்புக் கணக்கில் 100ரூபாவை அல்லது அதற்கு மேற பட்ட தொகையை வைப்புச்செய்தால் பரிசுத் திட்டத்திற்குத் தகுதிபெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(3-11)

# மாணவர்களின் சேமிப்பை ஊக்குவிக்க சமுர்த்தி வங்கி புதியதிட்டம் அறிமுகம்

பாடசாலை மாணவர்களுக்குச் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் 'சிசுரக்க' என்னும் விசேட கணக்குத் திட்டம் ஒன்றை சமுர்த்தி வங்கிகள் அறிமுகம் செய்துள்ளன.

இத்திட்டத்தில் இணைந்துகொள்ளும் மாணவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் சிறுவர் தினத்தன்று வெகுமதிகள் வழங்கப்படவிருக்கின்றன.

சிறுவர் தினத்தன்று 3ஆயிரம் ரூபாவுக்கு மேல் சேமிக்கும் மாணவர் ஒருவருக்குப் புத்தகப் பை ஒன்றும், ஆயிரத்து 500 இற்கு மேல சேமிக்கும் மாணவன் ஒருவருக்குத் தொப்பி ஒன்றும் வெகுமதியாக வழங்கப்படும்.

இத்திட்டத்தில் இணைபவர்களுக்கு 8.5 சத




வீதம் வட்டியும் வழங்கப்படும்.

இத்திட்டம் தொடர்பான விவரங்கள் சமுர்த்தி வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவினால் மாவட்ட செயலகங்கள் ஊடாகச் சகல வங்கிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (3-161)

# தரமான சிமெந்தை விற்பனை செய்வதுடன் தொழில்நுட்ப ஆலோசனையும் வழங்குகிறோம்

## 'கொல்சிம்' நிறுவன அதிகாரி கூறுகிறார்



கடந்த கால யுத்தத்தால் அழிக்கப்பட்ட கட்டடங்களை மீளமைக்கத் தரமான சிமெந்தை விற்பனை செய்வதுடன் தொழில நுட்ப ஆலோசனைகளையும் வழங்குகின்றோம் 'கொல்சிம்' சிமெந்துநிறுவனத் தொழில்நுட்ப நிறைவேற்று அதிகாரி கவிந்திர ஜெயசூரிய இப்படிக் கூறுகின்றார்.

கொல்சிம் சிமெந்து (புத்தளம் சிமெந்து) அறிமுக விழாவும், சந்தைப்படுத்தல் கருத்தமர்வும் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றன. அதில் கலந்துகொள்ள வந்தசமயமே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு கொல்சிம் சிமெந்து அறிமுகம் மற்றும் அதன் பயன்பாடுகள்பற்றி, அந்நிறுவனத்தின் தொழில்நுட்ப நிறைவேற்று அதிகாரியான கவிந்திர ஜெயசூரியாவிடம் கருத்துக் கேட்டோம். அவர் நிறுவனம் தொடர்பாகவும், சிமெந்தின் தரம் தொடர்பாகவும் தெரிவித்ததாவது:-

கடந்தகாலங்களில் யாழ். குடாநாட்டில் இடமபெற்ற யுத்தம் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான வீடுகள் மற்றும் கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அழிக்கப்பட்டுள்ள கட்டடங்களை மீளக்கட்டியெழுப்புவதற்குத் தற்போது சாதகமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

இந்த நிலையைப் பயன்படுத்தி யாழ். குடாநாட்டு மக்கள் புனர்நிர்மாணப் பணிகளைத் துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர்.

அந்தப் புனர்நிர்மாணப் பணிகளுக்குத் தரமான சிமெந்தை வழங்குவதுடன், கட்டடத் தொழில்நுட்பம் தொடர்பான ஆலோசனைகளையும் வழங்குவதே எமது இந்த அறிமுகவிழாவின் முக்கிய நோக்கம்.

எமது கொல்சிம் சிமெந்து சர்வதேசத் தரச சான்றிதழ் பெற்ற முதற்றரச் சிமெந்து. உலகிலுள்ள 70இற்கு மேற்பட்ட நாடுகளிலே இது விற்பனைசெய்யப்படுகிறது.

மக்களின் தேவைகருதி நாம் மூன்று விதமான சிமெந்துகளை உற்பத்திசெய்து விநியோகித்து வருகிறோம். இது தற்போது இலங்கையிலும் அறிமுகஞ்செய்யப்பட்டுள்ளது.

கொல்சிம் சிமெந்து முதன்முதலாகக் காங்கேசன்துறையிலேயே உற்பத்திசெய்யப்பட்டது. ஆனால், இங்கு இடம்பெற்ற யுத்தம் காரணமாகத் தொடர்ந்து உற்பத்தியை மேற்கொள்ளமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. தற்போது காலி, புத்தளம் ஆகிய இரண்டு இடங்களிலும் உற்பத்திசெய்கின்றோம். எம்மால் தற்போது அறிமுகப்படுத்தப்பட்ட மூன்று வகைச் சிமெந்துகளில் முதலாவது கொல்சிம் சுக்கிரி என்பதாகும். இது சிவப்புக்கலர் பைக் கற்றுக்களில் வருகிறது. கொங்கிறீற் போடுவதற்கு இது உகந்தது என்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது 'கொல்சிம் பெதரேயர்' என்று அழைக்கப்படும் கட்டடச் சிமெந்தாகும். பச்சை நிறப்பைக்கற்றுகளில் இது வருகிறது. இது கட்டுமானம் மற்றும் பூச்சுவேலைகளுக்குப் பயன்படுத்துவதற்கேற்பத் தரச்சான்றிதழ் (S.L.S தரச்சான்றிதழ் பெற்ற) பெற்றது.

மூன்றாவது நீலக்கலர் பைக்கற்றுக்களில் வரும் 'சீக்கிரம்' என்ற சிமெந்து. இது உடனடித் தேவைகளுக்குப் பயன்படுத்தக்கூடியது. இவற்றின் பயன் ஏனைய மக்களுக்குக் கிடைப்பது போல யாழ். குடாநாட்டு மக்களுக்கும் கிடைக்க வேண்டும்.

அத்துடன், நான் மிகவும் சந்தோசத்துடன் கூறிக்கொள்ள விரும்புவது யாதெனில், யாழ். மண்ணிலே தற்போது பாவனைக்கு வந்துள்ள 'கொல்சிம் சுக்கிரி' எனும் சிமெந்து கொங்கிறட் வேலைகளுக்காக உற்பத்திசெய்யப்பட்டது. இது இலங்கை தரச்சான்றிதழ் நிர்ணயசபையினால் மட்டுமல்லாது, உலகிலேயே எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அத்துடன், பிரிததானியத் தரச்சான்றிதழ் பெற்ற ஒன்று ஆகும்.

நாங்கள் ஏன் யாழ். மண்ணிலே கால்தடம் பதித்துள்ளோம் என்றால், யாழ்.குடாநாட்டில் யுத்தசூழல் அகன்று, சமாதானம்நிலவும் தற்போதைய சூழலில் கட்டடங்களைக் கட்டும் பணி முன்னேற்றமடைந்து வருகின்றது. அதனால், வடபகுதியிலுள்ள மக்களுக்கும் எமது சிமெந்தின் பயன் கிடைக்கவேண்டும் என்பதே எமது நோக்கம் ஆகும்.

நாம் இங்கு சிமெந்தினை விற்பனைசெய்ய வந்த விற்பனையாளர்கள் மட்டுமல்ல, எமது மக்களுக்கு ஏற்படும் சிமெந்து தொடர்பான எந்தவிதமான தொழில்நுட்ப ரீதியான ஆலோசனைகளையும் வழங்கத்தயாராகவுள்ளோம்.

எமது சிமெந்தின் விலை ஏனையவற்றுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைந்ததாகவே உள்ளது. யாழ். குடாநாட்டு மக்களுக்குப் போலியான பொருள்களை வழங்க நாம் விரும்பவில்லை. மக்கள் வாங்கக் கூடிய விலையில் விலையை நிர்ணயம்செய்து தரமான பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

கொல்சிம் சிமெந்து முற்றுமுழுதாக எமது மண்ணில் கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டே உற்பத்திசெய்யப்படுகிறது.

சிமெந்தினை மக்களுக்கு விற்பனைசெயவது மட்டுமல்ல, எமது பணி வரைபடங்கள் வழங்குதல், கட்டட நிர்மாணத்திற்கான ஆலோசனைகளை வழங்குதல் ஆகிய பணிகளையும் ஒரே நேரத்தில் மேற்கொண்டு வருகின்றோம் - என்றார்.

இந்த அறிமுக விழாவிலும் கருத்தமர்விலும் கொல்சிம் சிமெந்தின் பிராந்திய விற்பனை அதிகாரி இரத்தினராஜா விஜய்குமார், தொழில்நுட்ப அதிகாரி ஜெ.தயானந்தன் உட்பட யாழ். குடாநாட்டில் சிமெந்து விற்பனை செய்யும் முகவர்களும் கலந்துகொண்டனர்.

**- வசந்தன்.**

வாங்குங்கள்

# DSI

மோட்டார் சைக்கிள் டயர்கள்

## வெல்லுங்கள்

**10** புதிய ரக

**SUZUKI EN 125**

மோட்டார் சைக்கிள்கள்,

மற்றும் **100** ஓட்டுநர் மேலங்கிகளை.



DSI மோட்டார் சைக்கிள் டயர்களை வாங்குங்கள். அதன்மூலம் 10 புதிய ரக சுசூகி EN 125 மோட்டார் சைக்கிள்களை வெல்லுவதற்கான சந்தர்ப்பத்தினைப் பெறுங்கள். அத்துடன் வேறும் பல தரம்மிக்க 100 ஓட்டுநர் மேலங்கிகளை ஆறுதல் பரிசில்களாக வென்றெடுங்கள்.

நீங்கள் ஒரு DSI மோட்டார் சைக்கிள் டயரினை வாங்கும்போது, அதனது உத்தரவாத அட்டையை நிரப்பி, கீழ்வரும் முகவரிக்கு தபாலில் இடுவதன் மூலம், இப்போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெறுவீர்கள்.

DSI

இலங்கையின் முன்னணி மோட்டார் சைக்கிள் ரயர், எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

DSI 20 ஆண்டுகளில்

இச் சலுகை 2005 ஏப்ரல் 15 வரை மட்டுமே செல்லுபடியாகும்

உங்கள் வியாபாரியிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

நிபந்தனை கள் - ■ சாம்சன் றபர் இண்டஸ்றீஸ் (பிரைவேட்) லிம்டெற் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களுக்கும் இது ஏற்புடையதல்ல ■ வெற்றி பெறுபவர்கள் தமது அடையாளத்திற்கான ஆதாரத்தை சமர்ப்பிக்கக் கூடியதாய் இருக்க வேண்டும்.

அகன்ற பல வகை, தரம்மிக்க மோட்டார் சைக்கிள் டயர்களிலிருந்து தெரிவு செய்யுங்கள்.



ISO 9001-2000 சான்றுப்படுத்தப்பட்டது.

CREATIVE SERVICES

சாம்சன் றபர் இண்டஸ்ரீஸ் (பிரைவேட்) லிமிற்றெட்
ஜினசேன மாவத்தை, மகர, கடவத்தை
Tel: (011)2 926065, (011)4 816442
Fax: (011)2 925064, (011)4 816440
E-mail: dsityre@dsityre.lk www.dsityre.com



## புதிய பொலிவுடன்..!

# சிறி ஜெயந்தி நகைமாளிகை

மீண்டும் யாழ்நகரில்

74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில்

உங்கள் இளமைக்கு
மேலும் மெருகூட்டும்
கண்கவர் 22 கரட் தங்க நகைகளை
ஓடருக்கும், விரைவாகவும் பெற்றிட
உதயமாகின்றது.





அன்புடையீர்!

இன்று (23.10.2004) சனிக்கிழமை
காலை 7 மணிமுதல் 9 மணிவரையுள்ள
சுபவேளையில் எம்மால் மீளமைப்புச்செய்து மீண்டும்
புதுப்பொலிவுடன் இல.74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம் என்னும் முகவரியில்
'சிறி ஜெயந்தி நகைமாளிகை'
எனும் ஸ்தாபனத்தை
மங்களகரமாக ஆரம்பித்து வைக்கவுள்ளோம்.
இந்நிகழ்வில் எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,
உறவினர்கள், அனைவரும் தமது குடும்ப சகிதம்
வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

**சிறி ஜெயந்தி நகைமாளிகை,**
74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். **T.P.:021 222 2074.** **உரிமையாளர்.**

(சி-38481)(34-14-13)

# நற்காரியங்களை ஆரம்பிக்க உகந்த நன்னாள் விஜயதசமி



"அகர உயிர் போல் அறிவாகி எங்கும் நிகரில் இறைநிற்கும் நிறைந்து" என்பது திருவருட்பயன். அகரமரமாகிய உயிர் ஏனைய எழுத்துகளுக்கெல்லாம் முதலாய் அவற்றில் வேறறக் கலந்திருப்பது போல ஒப்பற்ற முதல்வன் அறிவே வடிவமாகி உலகம், உயிர எல்லாவற்றிலும் வேறறக் கலந்துநிலை பெற்றிருப்பான்.

அத்தகைய இறைவனைச் சக்தியாக வழிபடுதல் பன்னெடுங்காலமாக உள்ளது.

"சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்ற சைவ சித்தாந்தக் கருத்துக் கேற்ப இறைவனிலிருந்து பிரிக்க முடியாத சக்தியை நினைத்து அனுஷ்டிக்கும் விரதங்களுள் நவராத்திரி மிகவும் முக்கியமானதாகும்.

இந்நவராத்திரி காலத்திலே முதல் மூன்று நாள்களும் வீரம் தரும் துர்க்கா தேவியையும் இடை மூன்று நாள்களும் செல்வம் தரும் இலக்குமிதேவியையும் கடைசி மூன்று நாள்களும் கல்வி தரும் சரஸ்வதிதேவியையும் நினைத்து விரதம் அனுஷ்டிப்பர். பூசை முறையிலே மண்டபத்தின் நடுப்பகுதியிலே உமாதேவியாருக்குக் கும்பம் வைத்துஅதிலே துர்க்கைக்கும் வடக்கே அமைக்கப்பட்ட கும்பத்தில் இலக்குமிக்கும் தெற்கே அமைக்கப்பட்ட கும்பத்தில் சரஸ்வதிக்கும் பூசை செய்தல் சிறப்பானதாகும்.

இவ்வுலக இயக்கத்திற்கும் பூரணத்திற்கும் மிகவும் இன்றியமையாதவையான இம் முப்பெருஞ் செல்வங் களையும் சிறியவர் முதல் பெரியவர் வரை யாவரும் தத்தம் நிலைக்கேற்ப இறைவனை வழிபட்டுப் பெற்றுக்கொள்வர்.

நவராத்திரியிலே ஒன்பதாம் நாள் மகாநவமி என அழைக்கப்படும். அன்று பல்வேறுதொழில் புரிபவர்களும் தத்தம் தொழிற் கருவிகளை பூசையில் வைத்துதொழில் வளம்பெருகப் பிரார்த்திப்பர்.நவராத்திரியை அடுத்துவரும் பத்தாம் நாளே விஜயதசமி எனப்படும். அன்று இளஞ்சிறார் களுக்கு ஏடு தொடக்குதல், வித்தியாரம்பம் முதலியன நடைபெறும். விஜயதசமியன்று ஆலயங்களில் நடைபெறும் ஒரு முக்கியமான பூசை 'மானம் பூ' (மகா நோன்பு) எனப்படும். அது மகிடாசுர சங்காரமாகும். கன்னி விக்கிரமன் என்னும் மகிடா சுரனைச் சங்கரித்தமையால் தேவிக்கு 'மகிடவர்த்தனி' என்னும் திருநாமம் உண்டு. ஆலயங்க ளில் அன்று வன்னி மரம் அல்லது வாழைமரம் நாட்டி மகிடாசுரனைத் தேவி சங்காரம்செயவதாகப் பாவனை பண்ணி அம்மரத்தை வெட்டித் திருவிழாச் செய்வார்கள். மகிடாசுரன் என்பவன் கொழுத்த எருமைக் கடாபோல மாட்டுத்

பா.றமேஸ் புலோலி

தலையுடன் காட்சிகொடுப்பான். மகிடாசுர சங்காரம் என்பது உண்மையில் ஆன்மாக்களைப் பீடித்த ஆணவ மலத்தை அழித்தல் எனப் பொருள்படும். ஒன்பது நாளும் தேவியை வழிபட்டுப்பெற்ற சக்தியினால் ஆணவமலத்தை ஒழித்துவிட முடியும். இதனால் ஞானம் கைகூடும் என்பது தாற்பரியம்.

ஒன்பது நாள்களிலும் செய்த பூசையின் பலனால் அடுத்த நாள் எக்காரியமும் கைகூடும். ஆதலால் வெற்றி எனும் பொருள் பட விஜயதசமி என்று குறிப்பிடப்படுகிறது.

அன்று பல நற்காரியங்களையும் குறிப்பாக கல்வி கலை போன்றவற்றை ஆரம்பிப்பர். வட இந்தியாவிலே- இப்பத்துத் தினங்களையும் சேர்த்து தசரா என்றழைப்பர். அம்பிகை மகிஷாசூரனை வதம்செய்த தினம் விஜயதசமியாகும். இதனால் அம் பிகைக்கு மகிஷாசூர வர்த்தினி என்றபெயரும் உண்டாயிற்று.

இவ்வாறு சக்தி விரதங்களுள் சிறப்பான நவராத்திரி விரதத்தினை அகத் தூய்மையோடு ஏற்றி எம்மைப் பீடித்திருக்கும் கொடிய தீமைகளை அகற்றி நற்கதி பெறுவோமாக. ◘

## நவராத்திரி நிகழ்வுகள்

அரியாலை,ஒக்.23

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் இன்று மாலை 5மணிக்கு மானம்பூஉற்சவம் நடைபெறும். (10-17)

★ ★ ★

அரியாலை,ஒக்.23

நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலயத்தில் இன்று மானம்பூ உற்சவம் நடைபெறவுள்ளது.

மானம்பூ உற்சவத்தை முன்னிட்டு காலையில் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். (10-17)

★ ★ ★

அரியாலை,ஒக்.23

நவாலி வடக்கு ஞானவைரவ ஆலயத்தில் இன்று பிற்பகல் 2மணிக்கு மானம்பூ உற்சவம் இடம்பெறும்.

உற்சவத்தையொட்டி இன்றைய தினம் காலையில் அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். (10-17)

★ ★ ★

அரியாலை,ஒக்.23

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் வாணிவிழா இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும்.

சங்கத் தலைவர் சூ.சிறில் தலைமையில் நடைபெறும் விழாவில் பூஜை வழிபாடுகள், சிறப்பு சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (10-17)

★ ★ ★

அரியாலை,ஒக்.23

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் இன்று இடம்பெறும் மானம்பூ உற்சவத்தை முன்னிட்டு காலையில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும்.

அத்துடன், சமயச் சொற்பொழிவு மற்றும் ஆன்மக உரைகள் என்பன இடம்பெறும்.(10-17)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.23

அகில இலங்கை திருமுறை மன்றம் கொழும்புத்துறை மேற்கு இலந்தைக்குளம் மன்றுலாடும் விநாயகர் ஆலயத்தில் நடத்திவரும் இலவசத் தேவாரப் பண்ணிசை வகுப்பின் விஜயதசமிநாள் வகுப்பு இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

இவ்வகுப்பை தேவார இசைமணி கலாபூசணம் கே.எஸ்.ஆர் திருஞானசம்பந்தன் நடத்திவருகின்றார். இதில் புதிய மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். (4-203)

★ ★ ★

வலி.வடக்கு, ஒக்.23

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையின் விஜயதசமி விழாவும் வித்தியாரம்பமும் இன்று சனிக்கிழமை காலை இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் செ.சிவநடராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் விஜயதசமி பூசைகள் இடம்பெற்றுத் தொடர்ந்து 11மணியளவில் சிறார்களுக்கான வித்தியாரம்பமும் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (4-203-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.23

சரவணைமேற்கு வேலணை ஸ்ரீ அருள் வரதகாளி அம்பாள் ஆலயத்தின் நவராத்திரி விழாவும் கேதார கௌரி விரத ஆரம்பமும் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும்.

இந்நிகழ்வில் மானம்பூநிகழ்வு இடம்பெற்று தொடர்ந்து விசேட அபிசேக பூசைகள் இடம்பெற்று கேதாரகௌரி விரத நோன்பு ஆரம்பமாகும். (4-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.23

யாழ்.ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள சமூக அபிவிருத்தி மன்றத்தின் வாணி விழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு மன்றத்தின் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறும். (4-203)

★ ★ ★

நவாலி,ஒக்.23

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தில் கடந்த 14 ஆம் திகதிமுதல் நவராத்திரி விழா நடைபெற்றுவருகின்றது.

இதனையொட்டி தினமும் விசேட பூசை வழிபாடுகளும் சகலகலா வல்லி மாலை ஓதலும் இடம்பெற்று வருகின்றன.

இறுதி நாளான இன்று சனிக்கிழமை முருகப்பெருமான் வீதி உலா வருதலும் மாலை மானம்பூ உற்சவமும் இடம்பெறும். (4-100)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.23

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் நவராத்திரிவிழா இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஏடு தொடக்குதலும் சா.ஆரணியின் பேச்சு, ஜெ.சுபாசினியின் கவிதை சர்வம் சக்தி மயம் என்னும் பொருளில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கத்தின் சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெறும். (4-204)

# தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சிலிருந்து ஆறு அதிகாரிகள் திடீரென இராஜினாமா

கொழும்பு,ஒக்.23

தோட்ட உட்கட்டமைப்பு, பெருந்தோட்டத் துறை அமைச்சில் பணியாற்றிய 6 அதிகாரிகள் திடீரென இராஜினாமாச் செய்துள்ளனர். அமைச்சர் முத்து சிவலிங்கத்தின் அந்தரங்கச் செயலாளரும் அவர்களில் ஒருவர்.

அமைச்சர் முத்து சிவலிங்கத்தின் சந்தேகக் கண்கொண்ட பார்வையும், தமக்குக் கட்டுபடாது இ.தொ.காங்கிரஸ் தலைவர் தொண்டமானின் சொல்கேட்டு இவர்கள் நடக்கிறார்கள் எனும் நச்சரிப்பு கலந்த நடத்தையுமே முத்து சிவலிங்கத்தின் அமைச்சில் இருந்து இவர்கள் திடீரென இராஜினாமாச் செய்யக் காரணம் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தோட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது தொடர்பில் ஏற்கனவே கோரப்பட்ட விணப்பத்தைத் தவிர்த்து மீண்டும் புதிதாக விண்ணப்பங்கள் கோரியமை குறித்து நிலவிய முரண்பாடும், அமைச்சு உயர்மட்ட அதிகாரிகளிடையே முற்றியதும் இராஜினாமாவுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, மலையகத்தில் தொண்டமான் பவுண்டேஷன் அமைப்பதற்கு அனுமதி வழங்கவும் கூடாது. அதற்கு நிதியுதவி செய்யவும் கூடாது என ஜனாதிபதியை பிரதி அமைச்சர்கள் மூவர் கோரியுள்ளனர்.

தொழிலாளர் காங்கிரஸ் அமைச்சுப் பதவியை ஏற்று அரசில் இணைந்துகொண்டதால் அமைச்சர் பதவியை முதலில் இழந்த சி.பி.ரத்நாயக்க, ஜே.வி.பியைச் சேர்ந்த விஜித ஹேரத மற்றும் டி.யூ.குணசேகர ஆகியோரே அந்த மூவரும் எனவும் தெரியவருகிறது.

# ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க மிகவிரைவில் சர்வஜன வாக்கெடுப்பு

## பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில் தெரிவிப்பு

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்து சந்திரிகா அம்மையாரை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவருவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு மிகவிரைவில் நடத்தப்படும். அதற்கான ஏற்பாடுகள் மிக ஷிரைவாக இடம்பெற்றுவருகின்றன.

- இவ்வாறு தெரிவித்தார் கிழக்கு மாகாண உட்கட்டமைப் பிரதி அமைச்சர் எம்.ஐ.அன்வர் இஸ்மாயில். வியாழக்கிழமை காலை சம்மாந்துறை நகர மண்டபத்தில் இடம்பெற்ற இரண்டாம் கட்டமாகப் பட்டதாரிபயிலுநர் நியமனம் வழங்குவதற்கான பயிற்சிவழங்கும்நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டின் எதிர்காலத்தை வளம்கொழிக்கச் செய்யும் ஏற்பாட்டினை அரசு மேற்கொண்டு வருகிறது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி அதிகாரத்தை அனுபவித்துப் பார்க்கும் வாய்ப்புகளே கிடையாதென பிரபல சோதிடர்களின் கணிப்புக்கள் கூறுவதாக சிங்களச் செய்தி ஊடகங்கள் தெரிவித்திருக்கின்றன.

ஐ.தே.கட்சி அரசாட்சியின்போது வேலை வாய்ப்பு என்பது முயற்கொம்பாக இருந்தது. பட்டதாரிகள் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது.

மற்றுமொரு ஜனாதிபதித்தேர்தல் 2005 டிசெம்பரில் அல்லது அதற்கு முன்பு வரும். அதற்கும் முன் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுமென்று கருதுகிறேன் என்றார்.

# சமையல் கலையை....

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யும் இயந்திரம் தையல் மெஷின் எலக்ரிக் அவ்ன், காஷ் அவ்ன், றைஸ்குக்கர் போன்ற பலதரப்பட்ட உபகரணங்களினைத் தயார் செய்கின்றனர்.

**பயிற்சிப் பாடசாலை**

எமது பயிற்சி வகுப்புகளில் பெண்கள் மட்டுமல்ல ஆண்கள் கூட இணைந்து பயிற்சி பெறுகின்றார்கள். இந்த அவசர உலகத்திலே பெண்கள்தான் சமையல் செய்யத் தெரிந்தவர்கள் என்று அவர்களை எதிர்பார்த்து நிற்க வேணடிய தேவை இல்லை என்பதனை எமது பயிற்சி வழங்கலின் மூலம் உணர்ந்துகொண்டோம்.

எனினும், பெரும்பாலும் வெளிநாடுகளுக்குத் தொழில் முயற்சிக்காகச் செல்லும் இளைஞர்களே இப்பயிற்சியில் இணைந்து கற்கின்றனர். ஏனெனில், இவ் "மைக்ரோ அவ்னின்' சமையற் கருவியைச் சரியான பயிற்சி இல்லாது இயக்க முடியாது. வெளிநாடுகளுக்குச் செல்லும் இளைஞர்களில் பெரும்பாலானோர் "மைக்ரோ அவ்ண்' மூலமே தமக்கு வேண்டிய உணவு வகையினைத் தயாரிக்க வேண்டிய நிலையுள்ளது. எனவே, சகலரும் இத்தகைய சமையற் கருவியைப் பயன்படுத்தத் தெரிந்திருப்பது அவசியமாகும்.

புதிய கருவிகள் பற்றி அறிந்துகொள்வது மிகவும் அவசியமாகும். புதிய கருவிகளினைப் பயன்படுத்தும்போது காலத்தையும் நேரத்தையும் மிச்சப்படுத்தமுடியும். அத்துடன் எலக்ரிக் அவ்ன் போன்றவை மூலம் எரிபொருள் செலவைக் குறைக்கலாம்.

இக்கருவிகளினை முறையாக இயக்கக் கற்றுக்கொண்டால் வாழ்க்கை சுலபமாகவும் இலகுவாகவும் இருக்கும். எமது ஏனைய வேலைகளினைச் செய்வதற்கு நேரம் கிடைக்கும். இதனால் கருவிகள் மூலம் பெறக்கூடிய அதிகபட்ச பயன்பாடுகளினை விளக்கவே நாம் இங்கு வந்தோம்.

**நடமாடும் சேவை**

இலங்கை முழுவதும் சிங்கர் நிறுவனம் வியாபித்து பிரபல்யமடைந்துள்ளது. இதன் ஒரு பிரிவாக நடமாடும் சேவை ஒன்றும் உள்ளது. அந்த வாகனத்தில் விற்பனைக்கான சகல உபகரணங்களும் உள்ளன. அதன் பின்புறம் செயற்முறைப் பயிற்சிப் பிரிவும் உள்ளது. இதில் செயன்முறைகளினைச் செய்து காண்பிப்போம்.

நடமாடும் சேவையின் போதும் எமது கிளை நிறுவனங்களுடன் சேர்ந்து விற்பனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. விற்பனைகளின்போது விற்பனை செய்யப்படும் கருவிகளை இயக்கும் முறைகள் பற்றியும் விளக்கம் அளிப்பதற்கு நாம் தயங்குவதில்லை.

எமது நடமாடும் வாகனம் எமது யாழ். கிளை திறக்கப்பட்ட சமயம் இங்கு கொண்டு வரப்பட்டது. ஆனால், அதனைத் தொடர்ந்து இங்கு செயற்பட வைப்பதில் பல பிரச்சினைகள் உள்ளன. முக்கிய பிரச்சினை என்னவென்றால் அதன் விளம்பரப்பிரிவில் உள்ளவர்களுக்குத் தமிழ் தெரியாது. மற்றைய பிரச்சினைகள் என்னென்றால், சகல கருவிகளும் அதனுள்ளேயே - அமைக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டுவரும்போது சோதனைச் சாவடிகளில் வெவ்வேறாகக் கழற்றிக் காட்டவேணடியுள்ளது. இது எமக்கு மிகவும் சிரமமான ஒன்றாகும். இனிமேல் இது ஒரு பிரச்சினையாக இருக்குமென நான் நினைக்கவில்லை. ஏனெனில், நாம் ஜனவரியில் இங்கே வரவுள்ளோம். வந்து இங்குள்ள பாடசாலைகளிலும், ஆசிரிய பயிறசிக் கலாசாலையிலும் இதன் விளக்கங்களினை வழங்கவுள்ளோம்.

எமது சிங்கர் நிறுவனத்தினர் வருகின்ற தீபாவளியினை முன்னிட்டுப் பல இலகு கடன் வசதியடிப்படையிலும் விசேட விலைக் கழிவுடனும் தீபாவளி வரையான காலத்துக்குள் பொருள்களை விற்பனை செய்யவுள்ளனர். ★

# இளம் கலைஞர் மன்றத்தில் இசைவகுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.23

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் இசைவகுப்புகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகவிருக்கின்றன.

இந்த வகுப்புக்களில் சேரப்பதிவுகளை மேற்கொண்டவர்களுக்கான வித்தியாரம்பம் இன்று இடம்பெறும்.

வாய்ப்பாட்டு, பண்ணிசை, மிருதங்கம், வயலின், வீணை, பரதநாட்டியம் ஆகிய கலை வகுப்புக்களுடன் பாரம்பரிய கலையான நாதஸ்வரம், தவில் கலைகளுக்கான வகுப்புகளும் இம்முறை ஆரம்பமாவது குறிப்பிடத்தக்கது. (3)



கரப்பந்தாட்டம்

யாழ். இந்துக் கல்லூரி மைதானம்

ஞாயிற்றுக்கிழமை ஒக்ரோபர் 24 (ஐ.நா. தினம்) அன்று

**போரூட், யாழ்ப்பாணம்** இளைஞர் கழக அணிகள் பங்குகொள்ளும் **கரபந்தாட்டப் போட்டி**

காலை 10.00மணி விளையாட்டுகள் ஆரம்பம்

மாலை 4.00 மணி இறுதிப்போட்டி

பார்வையாளர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

FORUT (மதுவிலக்கு நல்லொழுக்க ஒழுங்கமைப்பு)

(C/38482) UTHAYAN Graphics

# பின்தங்கிய பகுதிகளிலுள்ள தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம்

கொழும்பு,ஒக்.23

பின்தங்கிய பிரதேசங்களில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவுள்ளதாக அமைச்சரவை அறிவித்துள்ளது.

இதற்கமைய 2515 தொண்டர் ஆசிரியர்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இத் தொண்டர் ஆசிரியர்கள் மூன்று வருடங்கள் பாடசாலை ஒன்றில் தொடர்ச்சியாகக் கடமையாற்றியிருக்க வேண்டும் எனவும் -

குறிப்பிட்ட பாடசாலையில் ஆசிரிய வெற்றிடங்கள் இருப்பதோடு, அத்தொண்டர் ஆசிரியர்களுக்குப் போதிய தராதரம் இருந்தால் அவர்களுக்கு அந்தந்தப் பாடசாலையிலேயே நியமனங்கள் வழங்கப்படும் என்று சமூக நலன் புரி மகளிர் விவகாரப் பிரதியமைச்சர் சந்திரசேன தெரிவித்துள்ளார். (4-202)


# பரிசளிப்பு நிகழ்வு

தென்மராட்சி,ஒக்23

சாவகச்சேரி வாரிவனேஸ்வர ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் அறநெறிப்பாடசாலையினர் நவராத்திரியை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்திய சைவசமய அறிவுப் போட்டியில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை பிய 3 மணிககு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

அறநெறிப்பாடசாலை அதிபர் ந.பு.ஸ்ரீந்திரன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் க.முருகதாஸ் முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார். (4-203-117-31)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 | 06 |
| 05 | 11 |
| 1921 | 2000 |

## அமரர் இ.நா.கந்தையா

(E.N.K - நாரந்தனை கிழக்கு)

திதி: தசமி 23.10.2004

அன்பால் அரவணைத்து ஆதரவுகள் - பல<br>
எமக்களித்து எம்மை உயரவைத்த தந்தையே!<br>
உங்கள் ஆத்மா சாந்திடையப் பிரார்த்திக்கின்றோம்.

55A, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (C/38477)(42) -குடும்பத்தினர்.

# மண மக்களை வாழ்த்துகின்றோம்

இன்று (23.10.2004) இல் வாழ்வில் இணையும் திருமணத் தம்பதிகளான

திருநிறை செல்வன்<br>
**வண T.S.யோசுவா**<br>
(குரு. தென்னிந்தியத்திருச்சபை. மூளாய்)

திருநிறை செல்வி<br>
**இராசு சுதர்ஜினி**

ஈழ மணித் திரு நாட்டில் - வளம்கொழிக்கும்<br>
யாழ்- குடா மேட்டினில் - அதிலடங்கும்<br>
வட்டுநகர் தனிலே ஆரம்பித்த குருப்பணியால்<br>
தொட்ட மக்கள் இதயங்களில் - தொடர்ந்து<br>
நீங்கள் வாழ்ந்திடனும் - என்றும்<br>
எங்கள் மனங்குளிர எங்கள் சேவையை ஏற்றுநின்று<br>
எங்களோடு ஒருவராக இன்றிணையும்<br>
நன் நாளை எண்ணி - வாழ்த்துகின்றோம்<br>
வாழ்த்துகின்றோம் மனமார வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்கள்:**

- ★ ஜீவ ஒளி இளைஞர் கழகம். வட்டுக்கோட்டை.
- ★ அருணோதயம்.
- ★ இன்பச்சோலைத் திருச்சபை மக்கள் நண்பர்கள்.
- ★ சமாதானக் கோட்டை திருச்சபை மக்களும் நண்பர்களும்.
- ★ ஆனந்த நிலைய திருச்சபை மக்களும் நண்பர்களும்.
- ★ செந்தமிழ் முன்பள்ளி, ,ஊரத்தி.
- ★ முத்தமிழ் முன்பள்ளி அராலி மேற்கு.
- ★ பைந்தமிழ் ச.ச. நிலையம் அராலி மேற்கு.
- ★ அம்பாள் முன்பள்ளி வட்டு. தெற்கு.
- ★ கிராமிய அபிவிருத்திச் சங்கம் காட்டுப்புலம்.
- ★ சீர்திருத்த கிராமியக்குழு சுழிபுரம் மத்தி.
- ★ சுங்காதேவி சு.தொ.சங்கம் திருவடிநிலை.
- ★ விவேகானந்தர் இளைஞர் கழகம் சுழிபுரம்.
- ★ பூமகள் மாதர் சங்கம் காட்டுப்புலம், சுழிபுரம்.
- ★ புதுமலர் மாதர் சங்கம் காட்டுப்புலம், சுழிபுரம்.

(37890)(17-44-33-18)

# கலைவாணி கல்வி நிலையம், கரவெட்டி

பதிவிலக்கம் :- K.V.D /324

## வருடாந்த பரிசளிப்பு விழா—2004

இடம் :- கலைவாணி கல்விநிலையம், கரவெட்டி<br>
திகதி :- 2004.10.24<br>
நாள் :- ஞாயிறு<br>
நேரம் :- பி.ப.2.00 மணி.

பிரதம விருந்தினர்:-<br>
உயர்திரு. சி.சிவலிங்கராசா<br>
சிரேஷ்ட விரிவுரையாளர்<br>
தமிழ்த்துறை,<br>
யாழ்.பல்கலைக்கழகம்,

சிறப்பு விருந்தினர்:-<br>
உயர்திரு.க.இராசையா,<br>
பிராந்திய உள்ளூராட்சி உதவி<br>
ஆணையாளர், யாழ்.மாவட்டம்.

### தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்—2003



| | |
|---|---|
| 1.செல்வி நே.ஆதித்தியா | 7.செல்வன் ச.அருள்ராஜ் |
| 2.செல்வி த.பிரியந்தி | 8.செல்வன் ம.கிருஷாந் |
| 3.செல்வி ம.கலைமதி | 9.செல்வன் ந.லோயிதன் |
| 4.செல்வி ம.உசாந்தி | 10.செல்வன் அ.ராஜ்கரன் |
| 5.செல்வி லோ.தேனுஷா | 11.செல்வன் சு.கிருஷாந் |
| 6.செல்வன் த.கவிராஜ் | 12.செல்வி நா.சுபாங்கனி |

### 2004




அமர்ந்திருப்போர்:- 1.நே.அங்கதன் 2:சி.மயூரப்பிரியா 3.செ.சஞ்சிகா 4.வி.லாவண்யா 5.யோ.ஜிவாகன் 6.பா.சுமந்தன்.நிற்போர்:-7.ந.சஞ்சீவன் 8.கு.கௌதமன் 9.ந.பாலமோகன் 10.சி.கிருஸ்ணப்பிரதாப் 11.அ.ஆதவன் 12.சி.நிதுர்சன்.

இம்மாணவச் செல்வங்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, தவணைப் பரீட்சைகளில் தடம் பதித்துப்பரிசு பெறும் மாணவர்களையும் போற்றுகிறோம்.

### 2003 க.பொ.த.(சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்



1. செல்வி அ.அனுதீபா 10A
2. செல்வி செ.கு.ஆன்தர்சிகா 9A,B
3. செல்வி சு.நிரோஜினி 8A,2C



மற்றும் சிறந்த பெறுபேறு பெற்றோர் ஆசிரியர் சகிதம் படத்தில் உள்ளனர்.

தரம் 3 தொடக்கம் தரம் 11 (O/L) வரையான கல்விச்சேவையின் முன்னோடி நிறுவனம் கலைவாணி கல்வி நிலையம்,கரவெட்டி

மேற்படி விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்கள்,<br>
மாணவர்கள் K.E.C. கரவெட்டி.

## கண்டாவளை வீதியூடாக பேருந்துச் சேவை

பரந்தன்,ஒக்.23

கண்டாவளை வீதியூடாக கடந்த 4 ஆம் திகதி முதல் பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப் பேருந்து சேவையானது பரந்தன், முல்லைத்தீவு பிரதான வீதி, வெளிக்கண்டல் சந்தி வழியாக கண்டாவளைக்குச் செல்கிறது.

பலகாலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த பேருந்து சேவை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் மக்கள் பெரும் மகிழ்வடைந்துள்ளனர். (8-204-352)

## குள வாய்க்கால்கள் புனரமைப்பு

விசுவமடு,ஒக்.23

விசுவமடு நீர்ப்பாசன குளத்தின் பிரதான நீர் வழங்கும் வாய்க்கால்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் இருந்த இந்த வாய்க்கால்களே தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன.


இதேபோல் இக்குளத்தின் கீழான ஏற்று நீர்ப்பாசன வாய்க்கால்களும் இரண்டு லட்சத்து அறுபத்து மூவாயிரம் ரூபாவில் புனரமைக்கப்பட்டுள்ளன. (4-402)

## உதைபந்தாட்டப் போட்டி

வட்டக்கச்சி,ஒக்.23

ஸ்கந்தபுரம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகமானது அமரர்களான இ.பசுபதி, ப.செந்தூரன் ஆகியோரது ஞாபகார்த்தமாக மாபெரும் உதைபந்தாட்டப் போட்டியொன்றினை நடத்துகின்றது.

இதில் 25 அணிகள் பங்குகொள்கின்றன. இப்போட்டிகள் தமிழீழ விளையாட்டுத்துறையினரின் அனுசரணையுடன் நடத்தப்படுகின்றன. (4-405)



முத்தையன்கட்டு இடதுகரையில் புதிதாக அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின் முதன்மை அறையினை யுனிசெவ் உதவித் திட்டப் பணிப்பாளர் செல்வி ஹிறோகா நாடாவை வெட்டித் திறந்து வைக்கும்போது எடுக்கப்பட்ட படம். (படம்:ஒட்டுசுட்டான் செய்தியாளர்)

## விவசாய வேலையாளர்கள் பற்றாக்குறை

கிளிநொச்சி,ஒக்.23

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய வேலையாள் பற்றாக்குறை காரணமாக காலபோக நெற்செய்கை பாதிப்படையும் நிலை ஏற்பட்டுளளது.

இதன் காரணமாக உரிய காலத்தில் நெற்செய்கையை மேற்கொள்ள முடியாமல் உள்ளதாகவும், கூடிய வேதனத்தைக் கொடுத்தே வேலையாள்களை வேலைக்கமர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (8-352)

# ஆரோக்கியமாக இருந்த சமாதானம் தற்போது வலுவிழந்து செல்கிறது!

### முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன்

விசுவமடு,ஒக்.23

சமாதானத்தின் ஆரம்பகட்டம் மிகவும் ஆரோக்கியமானதாக இருந்தபோதும் இன்று அதன் நிலை மிகவும் பலவீனமாக உள்ளது.

அன்றும் இன்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் பலமானவர்கள் என்பதை ஸ்ரீ லங்கா அரசு உணர்ந்துகொண்டதால்தான் இன்றுவரை சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

- இவ்வாறு முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் தெரிவித்தார்.

எதிர்வரும் மாவீரர் தினத்தை முன்னிட்டு உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற ஒரு கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதுவரை 6 சுற்றுப் பேச்சுக்கள் நடந்த போதும் இடைக்கால அரசு பற்றிய தீர்வினை அரசு ஏற்காமல் அதற்குப் பதிலான நடைமுறைகளைப் பற்றி கூறி வருகிறது.

சர்வதேச ரீதியில் தாம் சமாதானப் பிரியர்கள் என்று காட்டிக்கொள்ளும் அதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழர்களையும் சமாதானத்திற்குத் தடையானவர்கள் என்று அரசு சர்வதேச ரீதியில் பிரசாரம் செய்து வருகின்றது.

சமாதான காலத்திற்குள் சமாதானம் என்ற போர்வைக்குள் இருந்துகொண்டே போர்க்கப்பல்கள், போர்க்கருவிகள் போன்றவற்றை சர்வதேசத்திடமிருந்து பெற்றுக்கொண்டும் அதேவேளை, இராணுவத்தினருக்கு பயிற்சிகளை முன்னெடுத்துக்கொண்டும் இராணுவ ரீதியிலான சந்திப்புக்களை நடத்திக்கொண்டும் அரசு கபடநாடகமாடி வருகின்றது.

எனவே, மாவீரர்நாள் உலகிற்கு செய்தி சொல்லும் நாளாக அமைய வேண்டும். புலிகளின் உறுதியை - பலத்தை, மக்களின் உறுதியை சர்வதேசம் எங்கும் வெளிப்படுத்தும் நாளாக அமைய வேண்டும் - என்று தெரிவித்தார்.

முல்லை மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

. இலங்கையில் ஏனைய ஆசிரியர்களைவிட தமிழ்ப் பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களிடம் மிகப் பாரிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தனியே மாணவர்களின் கல்வி மேம்பாடு மட்டுமன்றி சமூகத் தேவை தொடர்பாகவும் தமிழர் கல்வி, வாழ்வியல் இருப்பினைத் தீர்மானிக்கும் சக்திகளாகவும் ஆசிரியர்கள் விளங்குகினறனர்.

இனப்பற்று, தேச நலன், உண்மை நிலைப்பாடு, தமிழர் வரலாறு, அதன் உண்மையான பக்கம், விடுதலைப் போராட்டம், மாவீரர்களின் அர்ப்பணிப்பு, தியாகம் போன்றவற்றை எதிர்கால சந்ததியினருக்கு தெளிவாகத் தெரிவிக்க வேண்டிய கடப்பாடு ஆசிரியர்களின் கையில் உள்ளது.

தமிழீழப் போராட்ட வரலாற்றினை மாணவர்கள் தெரிந்துகொள்ள, தரம் 6,7,8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு "தமிழீழ வரலாறு" கற்பிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் போராட்டம் பற்றிய உண்மையான பாடத்தை அறிவதற்கு வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டமானது தமிழீழ மக்களின் போராட்டமாக வெளியுலகிற்கு தெரியப்படுத்த வேண்டிய தருணம் இது. உண்மையாக, உள்ளன்போடு இந்த வழிப்புணர்வை வெளியுலகிற்குப் புலப்படுத்தவேண்டும். (4-402-202)

## வட்டக்கச்சி ம.வியின் பொன்விழா நிகழ்வுகள்

வட்டக்கச்சி,ஒக்.23

வட்டக்கச்சி, ம.வியின் பொன்விழா எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. 1954ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இவ்வாண்டு 50 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் நிலையில் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்விழாவானது மூன்று அமர்வுகளாக நடைபெறவுள்ளது. முதல் அமர்வில் பொன்விழா மலர் வெளியீடும், இரண்டாம் அமர்வில் பரிசளிப்பு நிகழ்வும், மூன்றாம் அமர்வில் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இவ்விழாவுக்கான ஏற்பாடுகளில் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களுடன் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளும் ஈடுபட்டு வருகின்றனர். (4-405)

## காலபோக விதைப்பில் விவசாயிகள் மும்முரம்

முழங்காவில்,ஒக்.23

தற்போது பெய்துவரும் பருவமழை காரணமாக வன்னிப் பிரதேசத்தில் பல இடங்களில் காலபோக நெல் விதைப்பு நடைபெற்று வருகிறது.

பல்லவராயன்கட்டு, குமுழமுனை, நாகபடுவான், வேரவில், கிராஞ்சி, பொன்னாவெளி ஆகிய பிரதேசங்களில் விவசாயிகள் ஆர்வத்துடன் விதைப்பில் ஈடுபடுவதனைக் காணமுடிகிறது. (4-323-204

## கூட்டுறவுக் கருத்தரங்கு

வட்டக்கச்சி ம.வியில் கடந்த 13 ஆம் திகதி கூட்டுறவுக்கருத்தரங்கு ஒன்று நடை பெற்றது. ஜி.சி.ஈ. உயர்தர மாணவர்களின் குழுவில் செயற்றிட்டத்திற்கேற்ப இக்கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதன்படி பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றினை உருவாக்குதலே நோக்காகும்.(4-405)

# அறுவடைக்காலத்தில் அடைமழை; சிறுபோகத்துக்குப் பெரும் பாதிப்பு!

பரந்தன்,ஒக்.23

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் தற்போது தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையினால் சிறுபோக நெல் உற்பத்தி செய்த விவசாயிகள் பெரும் பாதிப்படைந்திருக்கின்றனர்.

கிளிநொச்சி, பன்னங்கண்டி, ஊரியான், முரசுமோட்டைப் பகுதிகளில் இப்போது சிறுபோக அறுவடைக்காலம் ஆனால், அங்கு அறுவடைக்கு இடங்கொடுக்காமல் மழை தொடர்ச்சியாகப் பெய்துகொண்டிருக்கின்றது.

அறுவடை செய்யப்பட்ட நெல்லும் சூடு மிதிக்க முடியாத நிலையில் மழையில் நனைந்துகொண்டிருக்கிறது.

இப்பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள கூலி ஆள்கள் தட்டுப்பாடு காரணமாக, உரிய காலத்தில் நெல் அறுவடையை மேற்கொள்ள முடியவில்லை என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

மழை காரணமாக பெருமளவு நெற்சூடுகள பழுதடைந்துள்ளன. இதனால் நெல்லை அறுவடை செய்த விவசாயிகள் பெரும் நட்டமடைந்திருக்கின்றனர். (4-204-352)




## கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் சிறப்புற நடந்த முதியோர் வார நிகழ்வு

விசுவமடு,ஒக்.23

கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் சமூக சேவை உத்தியோகததரின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்குப் பிரதேச செயலர் சத்தியசீலன் தலைமையில் முதியோர் வார நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு விருந்தினர்களாகக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.இராஜகுலசிங்கம், கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத தலைவர் ம.நடராசா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கண்டாவளைக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற கட்டுரை, பேச்சு, கவிதைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

16 கிராம சேவையாளர் பிரிவுகளில் ஒவ்வொரு முதியவர்கள் தெரிவுசெய்யப்பட்டுக் கௌரவிக்கப்பட்டுள்ளனர். (4-402)

## விசுவமடுப் பிரதேசத்தில் அரிசியின் விலை அதிகரிப்பு

பரந்தன்,ஒக்.23

விசுவமடுப் பிரதேசத்தில் அரிசிவிலை அதிகரித்து விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விசுவமடுச் சந்தைக்குட்புறம் உள்ள சில கடைகளில் ஒரு கிலோ புழுங்கல் அரிசி 40 ரூபாவாகவும் சம்பா அரிசி 50 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

நெல்லின் விலை குறைவாக இருக்கின்ற போதிலும் அரிசியின் விலை அதிகரித்திருப்பதையிட்டு மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (4-204-352)

## ஸ்கந்தபுரம் நூலகத்தில் வாசிப்புமாதம் அனுஷ்டிப்பு

ஸ்கந்தபுரம்,ஒக்.23

ஸ்கந்தபுரம் நூலகத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் அங்கு இம் மாதம் வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டு அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த நூலகம் பல வசதிக்குறைவுகளுடன் இயங்கி வருகிறது. தினவாரப் பத்திரிகைகள் போதியளவு எடுக்கப்படுவதில்லை. இதனால் நாளாந்த செய்திகளைப் படிக்க வருவோர் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

மாணவர்களின் கற்றலுக்கு உதவி செய்யும் புத்தகங்கள் இல்லை. இந்த நூலகத்திற்கான நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்ற போதிலும் அந்தக் கட்டட வேலைகள் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை.

இக்குறைபாடுகளை நீக்கி வாசிப்பு, கற்றலை ஊக்குவிக்கும் முகமான பிரதேச சபையினால், இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி நூலகத்தின் குறைபாடுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-381-204)

## கிரவல் போடப்பட்ட வீதியில் புழுதியால் பயணிகள் சிரமம்

ஸ்கந்தபுரம்,ஒக்.23

ஸ்கந்தபுரம் அம்பலப் பெருமாள் சந்தி வரையிலான பிரதான வீதி, வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் கிரவல் மண்போட்டு புனரமைப்புச் செய்யப்பட்ட போதிலும் அதற்கு மேல் தார் ஊற்றப்படாததால் இந்த வீதியூடாகச் செலலும் பிரயாணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நீண்டகாலமாக சேதமடைந்த நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்பட்ட இந்த வீதி தற்போது வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் கிரவல் மண்மூலம் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்த வீதியூடாக கனரக வாகனங்கள் உட்படப் பலவாகனங்கள் அதிவேகமாகச் செல்வதால் கிளம்புகின்ற புழுதியினால் சைக்கிளில் செல்வோர் மற்றும் பாதசாரிகள் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் விபத்துக்களும் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (4-381)

## கப்டன் அப்பனின் நடுகல் திரை நீக்கம்

விசுவமடு,ஒக்.23

கடந்த 12-07-2000 அன்று ஸ்ரீ லங்கா படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்த கப்டன் அப்பன் (அரியதாஸ் அலைக்ஸ் - விநோதன், கீரிமலை) என்ற மாவீரரின் நடுகல் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் திரை நீக்கம் செய்யப்பட்டது. முன்னதாக அங்கு வணக்கக் கூட்டமும் இடம்பெற்றது. (4-402)

யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

**விசேட பொதுச்சபைக் கூட்டம்**

இடம்: கல்லூரி அழகரத்தினம் மண்டபம்
காலம்: நாளை (24.10.2004) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணி
தலைவர்: திரு.அ.மு.அருணாசலம் (அதிபர்)

சகல பழைய மாணவர்களும் இந்த மிகமுக்கிய கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- செயலாளர்.

(37895) (24-15-44)


## பரிசளிப்பு விழா

வலி.தென்மேற்கு,ஒக்.23

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்குக் கல்லூரி அதிபர் திருமதி திருபாசக்தி சிவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக வலி.மேற்குப் பிரதேச செயலக கணக்காளர் திருமதி இ.உதயகுமார் கலந்துகொள்வார். (10-135)


# SAAMSTECH இன்

**புதிய முறையிலான ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு**

ஒரு மொழி கதைப்பதற்கு முன் அதன் இலக்கணம் கற்பிக்கப்படின் அந்த மொழியைக் கதைக்கமுடியாது. SAAMSTECH இன் 24 வகுப்புகளில் ஆங்கிலத்தையோ, சிங்களத்தையோ முழுமையாகக் கதைக்கமுடியும்.

**SAAMSTECH இன் (5) கற்கை நெறி மையங்கள் இன்றுமுதல் ஆரம்பம்.**

SAAMSTECH, டச் ரோட், சாவகச்சேரி – இன்று மாலை 1.00 முதல்
SAMSTECH, விஸ்வதுல வீதி, பருத்தித்துறை – இன்று மாலை 2.30 முதல்
SAAMSTECH, கொடிகாமம் வீதி, நெல்லியடி – இன்று மாலை 3.30 முதல்
SAAMSTECH, மத்திய கல்லூரி எதிரில், அச்சுவேலி – இன்று மாலை 4.30 முதல்
SAAMSTECH, பிரதான வீதி, பண்டத்தரிப்பு – இன்று மாலை 5.30 முதல்

**இதனைச் சிறப்பிக்கும் வகையில் 23, 24 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) பாடநெறிகளுக்கு சேருவோருக்கு 50% சலுகைக் கட்டணத்துடன் ஆங்கிலம் ரூபா 3,000/-, சிங்களம் ரூபா 2,000/- மட்டுமே.**

**24 வகுப்புகளில் கதைக்கமுடியாத அனைவருக்கும் முழுப்பணமும் திருப்பித்தர உத்தரவாதம்.**

# SAAMSTECH

**841, Hospital Road, Jaffna.**
**T.P.: 021 4591571, 0773068968**

(C/38492) (24-13-15)


## புதிய மண்டபம் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.23

பருத்தித்துறை சாயி மந்திர் புதிய மண்டபத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அகில இலங்கை ஸ்ரீ சத்திய சாயி நிலையங்களின் மத்திய இணைப்பாளர் ஸ்ரீ. எம்.வன்னியசேகரம் புதிய மண்டபத்தை வைபவ ரீதியாகத் திறந்துவைப்பார். (4-202)

## பண்ணிசை வகுப்பு

கோப்பாய்,ஒக்.23

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தினால் இலவச பண்ணிசை வகுப்புகள் இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

சிவத்திரு.வி.செவ்வந்தி நாதக்குருக்களால் நடத்தப்படும். இப்பண்ணிசை வகுப்புக்களில் வலி. கிழக்குப் பிரதேச மாணவர்கள் அனைவரும் கலந்து பயன்பெறலாம். (4-72-202)

## 22ஆம் வருட நினைவலைகள்



அமரர்
**சின்னத்தம்பி கந்தையா**
(பொலீஸ் சார்ஜன்ட்)

மலர்வு 26-06-1940 உதிர்வு 26-10-1982

*ஆண்டுகள் இருபத்திரண்டு சென்றது அப்பா*
*ஆறவில்லை எம் துயரம்*
*உங்கள் நிழலில் வாழ்ந்த வாழ்வுபோல்*
*இனிவருமா?*
*ஆறுதலுக்கு ஆயிரம் உறவு இருந்தென்ன*
*அப்பா என்றழைக்க யாரும் இல்லை.*

*"திருவேரகம்",*
*உசன்,*
*மிருசுவில்.*

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
**மனைவி, பிள்ளைகள்.**

(37889)(42-13-15-24)

## மரண அறிவித்தல்

### Dr. நா.சிவரட்ணம்

**(இளைப்பாறிய உதவிப் பணிப்பாளர் மிருக, வைத்திய திணைக்களம், பேராதனை)**

Dr.நா.சிவரட்ணம் அவர்கள் 20.10.2004 அன்று காலமானார்.

அன்னார் கோப்பாய் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பதியினரின் அன்புப் புதல்வரும் இந்திராணியின் (பிரதிப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், கண்டி முன்னாள் பிரதி அதிபர் புனித அந்தோனியார் கல்லூரி, கண்டி) அன்புக் கணவரும் உடுவில் நடராஜா-பாக்கியரட்ணம் தம்பதியரின் மருமகனும் சிவஜா (U.K.), பிரியந்தி (MSC Student, UCSC) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயராஜசிங்கம் (U.K.) மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிவஞானபிரகாசம் (U.K.), சிவானந்தராஜா (நீர்கொழும்பு), சிவபாதசுந்தரம் (U.K.), சிவநேசன் (கனடா), சிவலிங்கம் (யாழ்) மற்றும் பரமேஸ்வரி, சிவநாதன் (யாழ்.), சிவராஜா (கொழும்பு), சிவபாலன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரபீந்திரன் (U.K.), குகேந்திரன் (IOM), கோவேந்திரன் (Sky Computers), பிறைசூடி (கோப்பாய் வடக்கு), Berney சிவாநந்தராஜா, செல்வமணி சிவபாதசுந்தரம், தெய்வீகராணி சிவநாதன், ராசமலர் சிவராஜா, செல்வராணி சிவநேசன், ஜெயரஞ்சிதம் சிவலிங்கம், ஜெயலட்சுமி சிவபாலன், காலஞ்சென்ற லீலாவதி சிவஞானப் பிரகாசம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (23.10.2004) சனிக்கிழமை காலை 9 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கண்டி மஹியாவ பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

273/116A, கட்டுகஸ்தோட்ட றோட்,
கண்டி. T.P.: 081 2213564
(37898)(38-18-43)

தகவல்:
திரு.நா.சிவநாதன்
"ஜெயபதி", உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.



## பரிசளிப்பும் நிறுவுநர் தினமும்

மட்டுவில் கமலாசனி வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தினமும் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (எ-6)

Jayoda **ஜயோதா** ජයෝද

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7439165 முதல் 7451623 வரை
சீட்டிழுப்பு இல. 78 திகதி 21-10-2004

வெற்றி எண்கள் **1 8 8 0 0 1** சுப்பர் எண் **8**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,23,28,575/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி வெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,23,28,575/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 50,000/- | 6,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 111 | 5,000/- | 5,55,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,098 | 500/- | 5,49,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,972 | 50/- | 5,48,600/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,08,733 | 10/- | 10,87,330/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 117 | 1,000/- | 1,17,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,095 | 100/- | 1,09,500/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,881 | 20/- | 2,17,620/- |
| மொத்தம் | 1,33,037 | | 54,31,650/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 54,31,650/-

இந்த திங்கட்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,26,33,675/-**

தொடர் இல. 6483058 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஒக்டோபர் 25 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான லட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

7441150-7-29
7439899-1-34
7440834-0-18
7449967-0-62
7450373-6-11
7451344-5-29
7445587-9-81
7442896-6-55

**கௌரி காப்பு**
முடிந்தபடி கௌரி காப்பு உண்டு.
விலை - 10/=
தொடர்பு:
**தா.வாசுதேவ குருக்கள், கோண்டாவில்.**
(37897)

## சேவைக்காலப் பயிற்சி

வலி.தென்மேற்கு,ஒக்.23

யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்திய சாலைகளிலும் மற்றும் சுகாதாரத்திணைக்கள நிறுவனங்களிலும் பரிசாரகர்கள், சாதாரண தொழிலாளர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மற்றும் சிறு பணியாளர்களுக்கு "நீப்" உதவித் திட்டத்தின் கீழ் சேவைக்கால பயிற்சி வழங்கப்படவுள்ளது.

பரிசாரகர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி அடுத்த மாதம் 8ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை நடத்தப்படும். சாதாரண தொழிலாளர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மற்றும் சிறுபணியாளர்களுக்கான சேவைக்காலப்பயிற்சி அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறிகள் யாவும் யாழ். கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள முன்னர் யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனை இயங்கிய கட்டடத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை யாழ்.சுகாதாரத் திணைக்களம் செய்துள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கை யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்கள் ஆகியவற்றின் பொறுப்பதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஜ-135)

**புதிய ஓகன் (KEY BOARD)**
இசை வகுப்புக்கள் ஆரம்பம்
ஆசிரியர்: **ஸ்ரீகுகன்**
இன்று-பி.ப.5.30 (பு.நே.)
நாவலர் ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்.
(37901)


ராஜா யாழ்ப்பாணம்
இப்பொழுது இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
ரவிகிருஸ்ணா, சோனியா அகர்வால் நடிப்பில்
7/G ரெயின்போ காலனி (ரீமிக்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-38041)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ஸ்ரீகாந்த், ஸ்னேகா மற்றும் பலர் நடிப்பில்

போஸ்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00. (பு.நே)
(C-37749)

நிரஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன் நடித்த
அரசாட்சி (ரீமிக்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (புதியநேரம்)
NUTTY PROFESSOR-2
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 பு.நே.

சிற்றி சினிமா பண்டத்தரிப்பு
இன்று முதல்
இதயக் கன்னி (ரீமிக்ஸ்)
காட்சிகள் தினசரி 3.00, 7.00
ஞாயிறு 11.00, 3.00, 7.00 (பு.நே)
(சி-37902)

இன்று 2 ஆவது வருட பூர்த்தியை கொண்டாடுகின்றார்கள்
Aero Lanka
New way of flying
In Domestic Operation......
2nd ANNIVERSARY CELEBRATIONS

Trinco Office
No.47, Kandy Road,
Trincomalee.
Tel.:026-2221519
Fax:026-2221519
Head Office
No.500, Galle Road,
Wellawatte,
Colombo - 06
Tel.:2505632 - 3
Fax:2500626
Branch
No.295, Jampettah Street,
Colomb0-13
Tel.:2430782 Fax:2430782
Jaffna Office
No.86, Point Pedro Road,
Jaffna, Tel.:021-2226242
Fax:021-2225600
(C/38499)

POWER GYM இன் ஆரோக்கிய கருத்தரங்கு
BODY CARE & FITNESS CENTRE
தலைசிறந்த துறைசார் வைத்திய நிபுணர்களாலும், உடற்பயிற்சி நிபுணர்களாலும் கருத்துரை வழங்கப்படவுள்ளது.
இடம்: POWER GYM முன்றில் காலம்: 24-10-2004 ஞாயிறு பி.ப. 2 மணி முதல
"பிரவேசம் இலவசம்"
மேலதிக விவரங்கள் நாளைய உதயனில்
"POWER GYM"
230/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C/38496)(43-11-16)


## கண்ணீர் அஞ்சலி

வவுனியா வனவள அலுவலர் பரமானந்த சிவத்தின் அன்பு மனைவியும் ரமணன், யசோதா தேவகி ஆகியோரின்
அன்புத் தாயாருமான

**திருமதி அருந்தவம் பரமானந்தசிவம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.* (37900)(43-11-16)
சி.கிருஷ்ணமூர்த்தி, மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி வேலுப்பிள்ளை சின்னம்மா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கிளிநொச்சியில் வசித்தவருமாகிய திருமதி வேலுப்பிள்ளை சின்னம்மா அவர்கள் நேற்று (22.10.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் தனபாலசிங்கம், ஜெயபாலசிங்கம், யுகபாலசிங்கம் (ஆசிரியர், யாழ்.செ்ன்.ஜோன்ஸ் கல்லூரி), திருமதி சாந்தரூபா தியாகராஜா, காலஞ்சென்ற சத்தியரூபா குலநாயகம் ஆகியோரின் அன்புத் தாயாரும் ராஜேஸ்வரி, பபா, குணநிதி, தியாகராஜா ஆகியோரின மாமியாரும் முகுந்தன் (H.N.B. செட்டித்தெரு), காந்தன் (மாலைதீவு), பிரதாபன், ஆதவன் (ஜேர்மனி), தாரணி, தயாழினி (யாழ்.பல்கலைக் கழகம்), தயாளன், அனித்தா (Com.Bank, Jaffna), அகிலன் (H.N.B. Chunnakam), வினுதா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (24.10.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு உருத்திரபுரம் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன் வீதி, உருத்திரபுரம், கிளிநொச்சி.*
(37904)(43-11-16)

தகவல்:
வே.யுகபாலசிங்கம் (மகன்).
(ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்).
*46/2,கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*


யாழ்.மண்ணில் முதன் முறையாக
12x36 அளவுகளில்
Lazer Digital Colour Lab இனை
அறிமுகப்படுத்தி உள்ளோம்
QSS - 3201

இன்னும் ஒரு சில தினங்களில்
எமது நிறுவனத்தில் இச்சேவையினை
மிகவும் தரமாகவும், விரைவாகவும்
பெற்றுக்கொள்ள முடியுமென
எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு
மிகவும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.
(C/38806)(22-11-16)
MOORTHY LAZER DIGITAL COLOUR LAB
Jaffna Road, Manipay
T.P. 021 222 2884 E.mail: moorthylazer@yahoo.com

# வெள்ளைவான் கடத்தல் குறித்து படை அதிகாரி நடவடிக்கை எடுக்காததற்கு நீதிமன்றம் கண்டனம்

## ஆள்கொணர்வு மனுவிசாரணை முடிவில் வவுனியா நீதிபதி தெரிவிப்பு

வவுனியாவில் கடந்த 2000 ஆம் ஆண்டில் வெள்ளை வானில் வந்தவர்களால் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக இராணுவத்தினர் உரிய நடவடிக்கை எதனையும் எடுக்காதது குறித்து வவுனியா நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

2000ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15ஆம் திகதி அதிரடிப் படையினரின் சீருடையுடன் வெள்ளை வானில் வந்தவர்களால் அரியதாஸ் விஜயகுமார் (வயது -22) என்ற இளைஞர் கைதுசெய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டார். அதன பின்னர் அவர் வீடு திரும்பவே இல்லை.

தனது மகன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற்போனார் எனத் தெரிவித்து, அவரைக் கண்டுபிடிப்பதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆள்கொணர்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார் இளைஞரின் தாயார்.

மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய அந்த மனு தொடர்பான விசாரணைகள் வவுனியா நீதிமன்றில் இடம்பெற்றன. வழக்கு விசாரணை முடிவுற்றதை அடுத்து அதன் அறிக்கையை வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் நேற்று நீதிமன்றில் வாசித்தார். அப்போது நீதிமன்றில் மனுதாரர்கள் தரப்பில் காணமற்போனவரின் தாயார் சமுகமளித்திருந்தார். எதிர்த்தரப்பினர் சார்பில் எவரும் மன்றுக்கு வருகைதரவில்லை.

நீதிபதி தனது அறிக்கையில் தெரிவித்ததாவது:-

2000 ஆம் ஆண்டு அவசரகாலச்சட்டமும், பயங்கரவாதத் தடைச்சட்டமும் அமுலில் இருந்த காலமாகும். இராணுவத்தினருடன் தமிழ் இயக்கங்களும் இணைந்து செயற்பட்ட காலம் அது.

அத்தகைய காலகட்டத்தில் இந்த இளைஞர் வெள்ளை வானில் வந்தவர்களால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று வழகக்கு விசாரணைகள் மூலமும் சாட்சிகள் மூலமும் தெரியவந்துள்ளது. இளைஞர் கைதுசெய்யப்பட்ட காலத்தில் இராணுவத்தின் வன்னி 211 பிரிக்கேட் கட்டளைத்தளபதியாகக் கடமையாற்றிய டொன் மனுவல்கே தீபால் அல்விஸ், 15.06.2004 அன்று நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கையில், குறிப்பிட்ட இளைஞரைத் தாம் கைதுசெய்யவில்லை என்று தெரிவித்திருந்தார். எனினும் அவரை ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் கைதுசெய்தது என்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மூலம்தான் அறிந்து கொண்டார் எனவும் கூறினார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கமானது அப்போது இராணுவத்தினரோடு இணைந்து செயற்பட்ட இயக்கமாகும். ஆயுதத்துடன் இருந்த இயக்கமும் கூட. அவர்கள் அரசின் அனுமதியுடனும், இராணுவத்தினரின் அனுமதியுடனுமே தான் ஆயுதங்களை வைத்திருக்க முடியும்.

மேற்படி இளைஞர் கைதுசெய்யப்பட்டு இராணுவத்தின் ஜோசப் முகாமில் வைக்கப்பட்டிருந்தார் என்பதைத்தான் கண்டார் என்று சாட்சி ஒருவர் சத்தியக்கடதாசி மூலம் நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளார்.

அதே சமயம், ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தால் குறிப்பிட்ட இளைஞர் சட்டவிரோதமாகக் கைதுசெய்யப்பட்டு இருக்கிறார் என்பதை அறிந்தும், வன்னி பிரிக்கேட் கட்டளைத்தளபதி பொறுப்புள்ள ஒரு அதிகாரியாகச் சட்ட நடவடிக்கை எதனையும் எடுக்காதது கடும் கண்டனத்திற்குரியது.

இந்த வழக்கில், விசாரணையின் அடிப்படையிலும் சாட்சியங்களின் அடிப்படையிலும் இளைஞர் காணாமற் போன சம்பவத்திற்குப் பிரதான காரணமானவர்களாக ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தைச் சேர்ந்தவர்களே இருக்கின்றனர் என்று உறுதியாகத் தெரிகின்றது. எனவே, இந்த வழக்கை விசாரித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் உரிய தீர்ப்பை வழங்கவேண்டும் என்று வவுனியா நீதிமன்றம் பரிந்துரைசெய்கிறது.

இப்படி தனது அறிக்கையில் நீதிபதி தெரிவித்தார்.

## டோக்கியோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி டோக்கியோ பிரகடன நிதியுதவியில் ஜப்பானின் பங்களிப்புத் தொகையை ஜப்பான் இலங்கைக்கு வழங்க முன்வந்திருப்பதாக சில ஏஜென்ஸிகளும் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தத் தகவல்கள் புலிகளின் தலைமையைக் குழப்பத்திலும், அதிருப்தியிலும் ஆழ்த்தியிருக்கின்றன எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இலங்கை சமாதான முயற்சிகள் தொடர்பான ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி இந்த மாதம் பிற்பகுதியில் இலங்கை வருகின்றார். அவர் வன்னிக்கு விஜயம் செய்வார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அச்சமயம் அவரிடம் இவ்விடயத்தை புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கிளப்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

"அகாஷி வன்னி வரும்போது இவ்விடயம் குறித்து அவருடன் தீவிரமாக ஆலோசிப்போம்.

"ஐரோப்பிய நாடுகள் இலங்கை அரசுக்கு யுத்தத்திற்கு நிதியுதவி வழங்குவதை நாம் அனுமதிக்கமாட்டோம்.

"இந்த விடயங்கள் தொடர்பாக பலதடவை ஐரோப்பிய நாடுகளிடம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

"எனவே, ஜப்பான் அரசின் தீர்மானம் குறித்துக் கூறப்படுவது தொடர்பாக எமது நிலைப்பாட்டை யசூசி அகாஷியிடம் இம்முறை தெரிவிக்க இருக்கிறோம்." - இப்படித் தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டார் எனச் செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது. (ஐ-க)

## பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்ட இந்த மூவரும் முன்னுக்குப் பின் முரணான முறையில் வாக்குமூலம் அளித்ததால் அவர்கள் மீது தமக்குச் சந்தேகம் ஏற்பட்டது என்றும் -

அவர்களைக் கைதுசெய்து தலைமன்னார் பொலீஸ் நிலையத்தில் தாம் ஒப்படைத்தனர் எனவும் கடற்படையினர் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் மன்னாரைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் மற்றும் பொலீஸ், படை உயர் அதிகாரிகள் இக் கலந்துரையாடலில் பங்குகொண்டனர்.

கொலை, களவு, கசிப்பு உற்பத்தி, மணல் அகழ்வு போன்ற குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. இச்செயல்களில் ஈடுபடுபவர்களைக் கைதுசெய்யப் போதிய ஆளணி வசதி இல்லை எனப் பொலீஸார் சுட்டிக்காட்டினர்.

இத்தகைய சட்டவிரோதச் செயல்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொலீஸாருடன் படையினரையும் பணியில் ஈடுபடுத்த ஏற்பாடு செய்யப்படும் என்று தளபதி சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

யாழ்.நகரப் பகுதியில் அமைந்துள்ள படையினரின் சில காவலரண்கள் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கின்றது என மாநகர சபை ஆணையாளர் நதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார் என நீதித்துறையினர் படை அதிகாரிகளிடம் பிரஸ்தாபித்தனர்.

யாழ். நகரத் தளபதியுடன் இது தொடர்பாக மாநகர ஆணையாளர் கலந்துரையாடி போக்குவரத்துக்கு இடைஞ்சலான காவலரண்களை இடமாற்ற அல்லது அருகில் உள்ள இடத்துக்கு நகர்த்த நடவடிக்கை எடுக்கலாம் என்று சுனில் தென்னக்கோன் ஆலோசனை தெரிவித்தார்.

அவ்வாறு தீர்வு காணப்படாத பட்சத்தில் ஆணையாளர் தம்முடன் தொடர்புகொண்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வீதி ஒழுங்கு மற்றும் சட்டம் ஒழுங்கைச் சீராகப் பராமரிப்பதற்காக மதுபோதையில் வாகனம் செலுத்துதல், வேகமாக வாகனம் செலுத்துதல், சமாந்தரமாக சைக்கிள்களில் செல்லல் போன்ற செயல்களைத் தடுக்கத் தீவிர நடவடிக்கை எடுப்பது என்று கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-3)

# முல்லைத்தீவில் காணாமற் போனவரை இராணுவத்தினரே கைதுசெய்தனர்

## விசாரிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு வவுனியா நீதிமன்றம் பரிந்துரை

வவுனியா,ஒக்.23

1995ஆம் ஆண்டு முல்லைத்தீவில் நபர் ஒருவர் காணாமற் போனமைக்கு அப்பகுதியில் இருந்த இராணுவத்தினரே காரணம் என்று நீதிமன்றம் கருதுவதாக வவுனியா மாவட்ட நீதிபதி எஸ்.இளஞ்செழியன் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குப் பரிந்துரை செய்தார்.

மரியதாஸ் அன்ரனிதாஸ் என்ற நபர் காணாமற்போனமை தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனு மீதான விசாரணையின் இறுதியிலேயே நீதிபதி இவ்வாறு பரிந்துரைசெய்தார்.

1995ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 25ஆம் திகதி தனது சகோதரனான மரியதாஸ் அன்ரனிதாஸ் என்பவரை இராணுவத்தினர் கைதுசெய்தனர் என்றும் பின்னர் அவரைக் காணவில்லை என்றும் தெரிவித்து அவரது சகோதரி மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆள்கொணர்வு மனு ஒன்றைத் தாக்கல்செய்திருந்தார்.

முல்லைத்தீவு மாவட்டம், வவுனியா மாவட்டம் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்கு உட்பட்டது என்பதனால் இந்த மனுவை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி மேன்முறையீட்டு நீதிமன்றம் வவுனியா நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டிருந்தது. இதற்கமைய வவுனியா நீதிமன்றத்தில் இந்த மனு மீதான விசாரணைகள் பல மாதங்களாக நடைபெற்றன. விசாரணைகள் முடிவுற்றதை அடுத்து நேற்று வெள்ளிக்கிழமை நீதிபதி எம்.இளஞ்செழியன் தனது பரிந்துரைகளை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்தார்.

தனது பரிந்துரைகளை அவர் நீதிமன்றத்தில் வாசித்தார். அப்போது நீதிமன்றத்தில் எதிர்த்தரப்பான இராணுவத்தின் சார்பில் எவரும் ஆஜராகி இருக்கவில்லை. மனுதாரர்கள் சார்பில் காணாமற்போனவரின் சகோதரி மன்றில் சமுகமளித்திருந்தார்.

நீதிபதி தனது பரிந்துரையில் தெரிவித்துள்ளதாவது:-

கண்களால் கண்ட காட்சிகளின்படியும், நீதிமன்றில் அளிக்கப்பட்ட இரண்டு சாட்சியங்களின்படியும், நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களிலிருந்தும், சர்வதேச ரீதியிலும் இந்தியாவிலும் இடம்பெற்ற இத்தகைய வழக்கு விசாரணைகளை முன் உதாரணமாகக் கொண்டும், இந்த வழக்கில் காணாமற்போனவர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கும் மரியதாஸ் அன்ரனிதாஸ், இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு இருக்கின்றார் என்று வவுனியா நீதிமன்றம் கருதுகின்றது.

காணாமற்போனவர் தொடர்பான இந்த வழங்கில் இராணுவத் தரப்பில் வழங்கப்பட்ட சாட்சியத்தில், தாம் குறிப்பிட்ட நபரைக் கைதுசெய்யவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்கப்பட்டதன் காரணமாக அங்கிருந்த ஆவணங்கள் அனைத்தும் அழிந்து போய்விட்டன என்றும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி வழக்கை குற்றப்புலனாய்வுத்துறையினர் மூலம் விசாரித்துத் தீர்ப்பு வழங்குமாறு வவுனியா நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றுக்குப் பரிந்துரை செய்கின்றது.

- இப்படி நீதிபதி எம்.இளஞ்செழியன் தனது பரிந்துரையில் தெரிவித்துள்ளார். (ஐ)

## நோர்வேக்கு எதிரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டமைப்பு எம்.பிக்கள் சாதகமாக்கிக் கொண்டனர்.

இந்தப் பிரேரணை மீதான விவாதம் தமிழ்க் கூட்டமைப்பினரின் கடும் எதிர்ப்புக் காரணமாகவும் நேரமின்மை காரணமாகவும் பிறிதொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நோர்வே அரசு சமாதானப் பேச்சுக்களில் மத்தியஸ்தம் வகிப்பதிலிருந்து ஒதுங்கவேண்டும் என்ற பிரேரணையையே ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினர் கொண்டுவந்து உரையாற்ற முயன்றார்.

அதைக் கடுமையாக ஆட்சேபித்தார் கூட்டமைப்பு எம்.பியான இரா.சம்பந்தன்.

அடிப்படை மனித உரிமைகள் பிரச்சனையை எழுப்பி உரையாற்றிய இரா.சம்பந்தன் எம்.பி. மேற்படி பிரேரணை தொடர்பாக நடாளுமன்ற அறிவிப்புப் பலகையில் தமிழில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இதனால் மொழி புரியாத தமிழர் கூட்டமைப்பு எம்.பிக்கள் பலர் சபையை விட்டுச் சென்றுவிட்டனர் என்று கூறினார்.

இந்தப் பிரேரணை மீதான விவாதம் தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட விடயம். இதில் எமது எம்.பிக்கள் உரையாற்ற வேண்டிய கட்டாயத் தேவை உள்ளது. நாடாளுமன்ற அறிவித்தல் பலகையில் இது பற்றி தமிழில் குறிப்பிடாத ஒரே காரணத்தால் இதுபற்றி எமக்குத் தெரியாமல் போய்விட்டது. இந்தச் சபையில் கொண்டுவரப்படும் பிரேரணைகள் அனைத்தும் பற்றி தமிழிலும் அறிவிக்கப்படல் வேண்டும். - என்றார் சம்பந்தன்.

இந்த விடயங்களை சபையில் கூறிக்கொண்டிருந்தபோது ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள், வண. அத்துரெலிய ரத்ன தேரரை உரையாற்றுமாறு கோஷமிட்டனர்.

ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ "சபாநாயகர் கூட்டணி எம்.பிக்களுக்குச் சார்பாக நடந்துகொள்கிறார். எனவே, வண. அத்துரெலிய ரத்ன தேரரை உரையாற்ற உடனடியாக அனுமதிக்கவேண்டும்." - என்றும் கூறினார்.

சம்பந்தன் யாருடைய பேச்சையும் செவிமடுக்கவில்லை தாம் அடிப்படை மனிதவுரிமை பற்றியே இந்தச் சபையில் பேசுகிறார் என அவர் குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்குத் தமிழர்களால் தெரிவு செய்யப்பட்டு இந்தச்சபைக்கு அனுப்பிவைக்கப்பட்ட பிரதிநிதிகள் என்ற வகையில் நாம் இந்தப் பிரேரணை மீதான உரையை பிறிதொரு தினத்துக்கு ஒத்திவைக்குமாறு கோருகிறோம். இந்தச் சபையிலே பிரேரணைகள் சிங்களத்தில் மட்டும் முன்வைக்கப்படுவதால் எமக்கு அவை பற்றிப் புரிவதில்லை - என்றும் சம்பந்தன் கூறினார்.

அந்தச் சமயத்தில் இடையில் குறுக்கிட்ட அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, இந்தச் சபையில், யாரும் தமது தாய் மொழியில் பிரேரணைகளை முன்வைக்கலாம். இதுவரை காலமும் இப்படியான சம்பிரதாயமே இந்தச் சபையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது - என்றார்.

வண. அத்துரெலிய ரத்ன தேரருக்கு உரையாற்றுவதற்கு 20 நிமிடங்களே உள்ளன என்றும் அவர் உரையாற்ற விரும்பினால் அது பற்றித் தமக்கு ஆட்சேபனை இல்லையென்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

ஆனால், நாடாளுமன்றத்தின் 17ஆவது நிலையியற் கட்டளையின் படி அதற்கு இடமளிக்க முடியாது என்றும் சம்பந்தன் எம்.பி. திரும்பத்திரும்பக் கூறினார்.

இறுதியில் - இந்தச் சர்ச்சைகளின் முடிவில் - வண. ரத்ன தேரர் உரையாற்ற ஆரம்பிக்கும் போது அவருக்கு ஐந்து நிமிடங்களே எஞ்சியிருந்தன. அந்த இடைவெளியிலும் சம்பந்தன் குறுக்கிட்டார். முடிவில் தேரருக்கு உரையாற்றுவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

சபை நவம்பர் மாதம் 18ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் அறிவித்தார். (ஐ-க)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், பிரதிப் பணிப்பாளர் செல்வி, மட்டு.-அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் மகளிர் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கீதா ஆகியோர் பேர்லின் சென்றுள்ளனர்.

ஜேர்மன் அதிகாரிகளுடனான சந்திப்பில் சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை, சமகால அரசியல் நிலைமை, வடக்கு - கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்பு என்பன குறித்து இரு தரப்பினரும் ஆராய்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-க-ரி)


SKY COMPUTERS (PVT) LTD
Affiliated With Irish International University (U.K.)
sky
No, 89, Kandy Road, Chundikuli, Jaffna. Tel: 021-4590325 Fax: 021-4590325
No, 90, Galle Road, Colombo - 04, Tel: 011 5335261 Fax : 011 5371229
▶ Diploma in MS Office - 3 Months
▶ Certificate in MS-Word - 1 Month
▶ Certificate in MS-Excel - 1 Month
▶ Certificate in MS-Access - 1 Month
▶ Certificate in MS-Power Point - 1 Month
MS-Office 1500/=
▶ Diploma in Desk Top Publishing - 3 Months
▶ Certificate in Adobe Photo Shop - 1 Month
▶ Certificate in Adobe Page Maker - 1 Month
▶ Certificate in Corel Draw - 1 Month
சலுகைகளைப்பெற செல்லுங்கள்
Sky Computers நிறுவனத்திற்கு
மற்றைய நிறுவனங்களை விட, முற்றிலும் வேறுபட பயிற்சி முறை
இலகுவான கட்டணமுறை, தரமான ஆசிரியர்கள்
E-mail: skycom@wow.lk
(கச்சேரிக்கு அருகில்)
Today You Learn Tomorrow you Lead (சி-38475)(30)



ஈசன் கல்வி நிலையம்
இணைந்த கணிதம்
A/L 2005 PAPER CLASS
(அலகு ரீதியான மீட்டல் வினாவிடை)
திரு. ரஜனி
ஆரம்பம்: 26.10.2004
(37850)



வீடு தேவை
பொருள்கள் களஞ்சியப்படுத்துவதற்கு வீடு தேவை (மாநகர சபைக்கு உட்பட்ட பகுதி).
தொடர்பு-077-6036332
(சி-38465)



A/L தமிழ் Paper — பிரிவு-III ஆரம்பம் — 2005 Day
பிரிவு- I ச., ஞா. - 8.00 - 9.00
பிரிவு- II ச., ஞா. - 9.00 - 10.00
பிரிவு- III தி., பு. - 2.30 - 3.30
நாக.தமிழிந்திரன்
2006 புதியபிரிவு ச.,ஞா. 7 - 8
31 ஆம் திகதிக்கு பின் அனுமதியில்லை.
முந்திய அனுமதிக்கு சலுகையுண்டு.
நிர்வாகி, BEACON - யாழ்.
(37880)



Focus Education Centre
120, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். இந்து மகளிர் கல்லூரி முன்பாக)
Physics Paper Classes
Batch I: Sat./Sun. 7.00-8.30 a.m.
Batch II: Tue. 5.00 - 6.30 p.m.
Thu. 6.30 - 8.00 p.m.
1979-2004 வரையான கடந்த கால வினாத்தாள்களும் மீட்கப்படும்.
(37571)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.10.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.